தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

# அன்பு பகிர்வு இயக்கம்

மலர் : 11 / இதழ் : 5 / மார்ச் – 2015

## செய்திமலர்



"...நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது..."

மத். 8 : 13

ஆசிரியர்.
பேராயர். வே. தேவதாஸ்

## 15.03.2015 இல் பிறந்தநாள் காணும்

சகோதரி **வஹிதா தேவதாஸ்** அவர்களை

*வாழ்த்துகிறோம்....*



சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் தாயின் கர்ப்பத்தில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு பாத்திரம். பீல் ஆதிவாசி மக்களைக் குறித்த தரிசனத்தை திருமணமாகி ஒரே வாரத்தில் தேவனிடத்தில் இருந்து பெற்று குடும்பமாக பீல் மக்களுக்கு ஆவிக்குரிய தாயாக கர்த்தர் ஆசீர்வதித்திருக்கிறார்.

15.03.2015 அன்று **"பிறந்தநாள்"** (15.03.1963) காணும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களை அந்நாளில் அன்புடன் வாழ்த்துகிறோம். இந்த ஆண்டிலும் கர்த்தர் அவர்களுக்கு நல்ல சுகத்தையும், பலத்தையும் கொடுத்து, பீல் மக்களுக்கும் பாரத தேசத்திற்கும் ஆசீர்வாதமாக தேவன் பயன்படுத்த வாழ்த்தி ஜெபிக்கிறோம். நீங்களும் அந்த நாளில் ஜெபிக்க அன்புடன் கேட்கிறோம்.

சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களுடன் தொடர்பு கொள்ள : 09376018006

---



## தேவனைத் துதிக்கிறோம்...

**பேராயர் தேவதாஸ்** அவர்களின் மூத்த மகன் **சகோ. கிளாட்சன் டைட்டஸ் & சகோதரி மெர்லின்** தம்பதியருக்கு **25.01.2015** அன்று சுகப்பிரசவமாக தேவன் ஒரு ஆண் குழந்தையைக் *(Zion Kryston)* கொடுத்து ஆசீர்வதித்தமைக்காக அவரைத் துதிக்கிறோம். இதற்காக ஜெபித்த உங்கள் யாவருக்கும் நன்றி கூறுகிறோம். தேவனுக்கே மகிமை!

---

## 24.03.2015 அன்று பிறந்த நாள் காணும்

**சகோதரி. ஜாய் ஷெக்கினா** அவர்களை

*வாழ்த்துகிறோம்....*



பேராயர் தேவதாஸ் மற்றும் சகோதரி அவர்களுக்கு தேவன் கொடுத்த அன்பு மகள் ***ஜாய் ஷெக்கினா*** பீல் ஆதிவாசி மக்களுக்காக மருத்துவப் பணி செய்ய தன்னை அர்ப்பணித்து ரஷ்யாவிலுள்ள Stavropol University யில் மருத்துவப்படிப்பின் ஐந்தாம் ஆண்டை நிறைவேற்றி வருகிறார்கள்.

24.03.2015 அன்று பிறந்த நாள் காணும் சகோதரி ஜாய் ஷெக்கினா வை வாழ்த்துகிறோம். தேவன் தாமே ஞானத்தினாலும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினாலும் நிறைத்து மருத்துவப் படிப்பை நிறைவேற்ற ஜெபியுங்கள்.

***Shalom Pastors & Bhil Evangelists***
***Sharing Love Mission, Shalom Charity Mission &***
***Shalom Diocese in India.***

## உங்கள் சகோதரனிடமிருந்து



**...இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்...** (மத். 28:20)

***கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,***

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தேவன் தாமே கடந்த இரண்டு மாதங்கள் ஊழியப்பாதையில் நடத்திவந்து அநேக ஆத்துமாக்களை தந்து சபைகளை ஆசீர்வதித்து வருகிறார். உங்கள் யாவரின் ஜெபங்களுக்காகவும், தியாகமான அன்பின் ஆதரவுகளுக்காகவும் தேவனைத் துதித்து உங்கள் யாவருக்கும் எங்கள் நன்றியை கூறுகிறோம்.

### ஷாலோம் திருச்சபைகளின் ஒருங்கிணைப்பு

கடந்த பெப்ரவரி மாதத்தில் 3 மாநிலங்களில் உள்ள சபைகளை ஒருங்கிணைத்து முழு பீல் மக்கள் இரட்சிப்பின் தரிசனத்தை நம் பீல் ஆதிவாசி மூத்த ஊழியர்களுடன் பகிர்ந்து ஜெபித்து 2015ம் வருட திட்டங்கள்; மற்றும் 2020க்குள் முழு பீல் மக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து ஒவ்வொரு கிராமங்களிலும் சபைகளை ஸ்தாபிக்கும் திட்டங்களுக்காக அர்ப்பணித்து செயல்பட தீர்மானித்து உள்ளார்கள். ஷாலோம் ஊழியங்கள் நடந்து வரும் பணித்தளங்கள் 50 பிராந்தியங்களாகப் பிரித்து 100 தரிசன தலைவர்களை எழுப்பி பயிற்சி கொடுத்து வருகிறோம். 2016ம் ஆண்டு இறுதிக்குள் 1000 சபைகள் 1000 திருச்சபைகள் எழுப்பப்பட ஜெபியுங்கள்.

### சுதேச ஊழியர்களின் மனைவிமார்களுக்கான சிறப்பு கூடுகைகள்

**சகோதரி. வஹிதா தேவதாஸ்** தலைமையில் பணித்தளங்களில் உள்ள அனைத்து ஷாலோம் ஊழியர்களின் மனைவிமார்களை ஒருங்கிணைத்து இவ்வருடத்திற்கான சிறப்புக் கூட்டங்களுக்காக ஜெபித்து செயல்பட சிறப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டது.

### ஆதிவாசி மாணவர்களுக்கான பரீட்சைக்காக சிறப்பு பிரார்த்தனை

அனைத்து ஷாலோம் சபைகளில் இந்த நாட்களில் அநேக ஆதிவாசிகளின் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். குறிப்பாக 8, 10, 12 மேலும் கல்லூரிகளில் படிக்கும் பரீட்சைக்காக ஆயத்தமாக உள்ள மாணவ, மாணவிகளுக்காக சிறப்பு பிரார்த்தனை கூட்டங்கள் நடத்தப்பட்டது. சுமார் 1000 ஆதிவாசி மாணவர்கள் பங்கெடுத்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

### புதிய சுதேச ஊழியர்கள்

தேவகிருபையால் 2016ம் ஆண்டின் பணிகளை நிறைவேற்றும் திட்டத்தில் 50 புதிய சுதேச ஊழியர்களை மூன்று மாநிலங்களில் உள்ள நம் மூத்த ஊழியர்கள் உருவாக்கி தந்துள்ளார்கள். மார்ச் மாதம் இந்த புதிய ஊழியர்களுக்கான 1 மாத சிறப்பு வேதாகம ஊழிய பயிற்சி நடைபெற உள்ளது. இவர்கள் மூலமாக 50 திருச்சபைகள் உருவாகவும்; இவர்களுக்காக ஜெபித்து தாங்கும் குடும்பங்கள், சபைகள் எழும்பவும் ஜெபியுங்கள்.

## பணித்தளத்திற்கு அவசர தேவைகள்

வளர்ந்து வரும் ஷாலோம் திருச்சபைகளின் பணிகளை உற்சாகப்படுத்த மற்றும் ஸ்திரப்படுத்த கீழ்காணும் தேவைகள் சந்திக்கப்பட, சிறப்பு ஆதரவாளர்களை தேவன் தரும்படியாக வேண்டிக் கொள்ளுங்கள்.

❖ பாடல் ஆராதனைகளை நடத்த கிராமிய இசைக்கருவிகள் டோலக், ஜாலர் போன்ற ரூ. 3,500 மதிப்பில் 500 சபைகளுக்கு கிடைக்கப்பெற...

❖ மின்சார வசதிகள் இல்லாத 400 சபைகளுக்கு ரூ. 6,500 மதிப்பில் ஆம்ளிபயர், பேட்டரி வசதியுள்ள Speaker Box (Stranger) கிடைக்கப்பெற..,

❖ ரூ. 150 மதிப்பில் திருமுழுக்கு பெறும் குடும்பத்திற்கு ஒரு வேதாகமாக இவ்வருடம் குறைந்தது 10,000 வேதப் புத்தகங்கள் கிடைக்கப்பெற.

❖ 4000 மதிப்பில் 200 சுதேச ஊழியர்களுக்கு மிதி வண்டிகள் (Cycle) கிடைக்கப்பெற..

❖ ரூ. 2 இலட்சங்கள், ரூ. 3 இலட்சங்கள், ரூ. 5 இலட்சங்கள் மதிப்பில் 150 கிராம ஆலயங்கள் கட்டப்பட ஜெபிக்கவும், தாங்கவும் அன்புடன் அழைக்கிறேன்.

## 5000 ஷாலோம் மூப்பர்களுக்கான பயிற்சி முகாம்கள்

மார்ச், ஏப்ரல் மாதங்களில் 30 சபைகளில் தெரிந்தெடுக்கப்பட்ட (250 மூப்பர்களாக) 20 மூப்பர்கள் முகாம்களை மூன்று மாநிலங்களில் நடத்த வேண்டும். மூப்பர்கள் ஜெப ஆவியைப் பெற்று, ஆத்துமபாரத்துடன் சபைகளை நடத்திச் செல்லவும்; தேவன் தந்த தரிசன பணியை நிறைவேற்றவும் ஜெபியுங்கள். ஒவ்வொரு முகாமின் செலவுக்காக ரூ.20,000 கிடைக்கப்பெற ஜெபியுங்கள். மே மாதம் நடைபெற உள்ள 10 நாட்கள் CBC ஷாலோம் சிறுவர்கள் வேதாகம வகுப்புகளுக்காக குறிப்பாக புத்தகங்கள் மற்றும் பிற உபகரணங்கள்; பாடல் CD தயாரிக்கப்படவும்; 1200 ஆசிரியர்கள் மற்றும் இயக்குநர்கள் பயிற்சிக்காகவும் பயன்பெற உள்ள சுமார் 35,000 ஆதிவாசி சிறுவர்களுக்காகவும், தேவைகளான **ரூ. 7 இலட்சங்கள்** கிடைக்கப்பெற பாரத்துடன் ஜெபியுங்கள்.

## 40 நாட்கள் உபவாச ஜெபம்

தேவகிருபையால் இந்த நாட்களில் அனைத்து ஷாலோம் சபைகளிலும் விசுவாசிகள், மூப்பர்கள், ஊழியர்கள் 40 நாட்கள் உபவாசித்து தங்களுக்காகவும், குடும்பத்திற்காகவும், சபை எழுப்புதலுக்காகவும் தங்கள் சொந்த பீல் ஜனங்கள் இரட்சிக்கப்படவும்; 7000 கிராமங்களில் சபைகள், ஊழியர்கள் எழும்பவும்; குறிப்பாக நம் பாரத தேசத்தின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிக்கிறார்கள். மேலும் இந்த நாட்களில் புதிய ஆத்துமாக்களை சபைக்கு கொண்டு வரவும் ஏப்ரல் முதல் வாரத்தில் அனைத்து சபைகளில் நடைபெற உள்ள ஞானஸ்நான ஆராதனைகள் மற்றும் 2.4.2015 பெரிய வியாழன் அன்று நடைபெற உள்ள சிறப்பான திருவிருந்து ஆராதனைகளுக்காகவும், பெரிய வெள்ளி மற்றும் ஈஸ்டர் ஞாயிறு ஆராதனைகளுக்காகவும், உயிர்த்தெழுந்த பண்டிகை நாளை சுவிசேஷத்தை பறைசாற்றும் நாளாக ஆசரிக்க ஜெபியுங்கள்.

**ஆலய கட்டுமான பணிகள்**

தேவகிருபையால் குஜராத் மாநிலத்தில் லிம்பாகேடி, மோர்வானி, தஸ்லா, காபரியா, ஜாலத், உஸ்வானியா, ரீஸ்உம்ரா, தாபடியா,டோபேனோ கிராமங்களிலும்; மத்தியப்பிரதேசத்தில் மகுரியா, சாலக்யா, தெல்வாணி, அம்ஜேர், ஹத்யாதல்லி, உதய்பூரா, பிப்ளியா, அலிப்பூரா, டிக்கிடி கிராமங்களிலும் இராஜஸ்தானில் ஜாலிம்பூரா, காளியா, காட்டா, பொட்டேலியா, பாடல்வா, பண்டுவால் ஆகிய **25 கிராமங்களில்** நடைபெறும் ஆலயகட்டுமான பணிகள் தடையின்றி நடைபெறவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள். குறிப்பாக இவ்வருடம் 150 கிராம ஆலயங்கள் கட்டப்பட பாரத்துடன் ஜெபியுங்கள்.

ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபித்து தாங்கும் அநேகர் எழுப்பப்பட குறிப்பாக அநேக பிரதிநிதிகள் எழுப்பப்பட ஜெபியுங்கள். தொடர்ந்து நாங்களும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!!**

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*



(பேராயர் V. தேவதாஸ்) என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)

## சிறப்பு சாட்சி — குழந்தை பாக்கியம்



கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. எங்களுக்குத் திருமணமாகி 11 ஆண்டுகள் ஆகியும் குழந்தையில்லாமல் இருந்தோம். நாங்கள் எந்த மருத்துவரையும் நாடாமல் தேவனிடத்தில் மாத்திரம் விசுவாசமாய் இருந்தோம். ஆனாலும் தேவன் எங்களை சோர்ந்து போகவிடவில்லை. நாங்கள் 23.03.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று சகோ. ஜெபராஜ் (Jesus Heals, Tuticorin) அவர்கள் நடத்தும் கூட்டத்திற்குச் சென்றேன். அங்கே நான் குழந்தைக்காக விசுவாசத்தோடு கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டேன். அந்தக் கூட்டத்தில் இராஜஸ்தான் மாநிலம் கோய்க்கா கிராமத்தில் இருந்து வந்த **ஷாலோம் பீல் சுதேச ஊழியர் சகோ. பாதர் பாரியா** அவர்கள் என்னிடம் தீர்க்கதரிசனமாக **“10 மாதத்திற்குள் உங்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கும்”** எனக் கூறினார்.

நாங்களும் விசுவாசத்தோடு சென்றோம். என்ன ஆச்சரியம் அதே ஆண்டு டிசம்பர் மாதம் 15ம் தேதி எங்களுக்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. பீல் சுதேச ஊழியர்களை தேவன் பயன்படுத்துவதைப் பார்க்கும் போது மிகவும் ஆச்சரியமாக உள்ளது. எங்களுக்கு குழந்தை பாக்கியத்தைக் கொடுத்த தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**R. ஜெபராஜ் – எமிமாள் தம்பதியினர், தூத்துக்குடி**



# ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும்

சிறப்புச் செய்தி : **Sis. வஹிதா தேவதாஸ்**

ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. (யோவான்–1:1). தேவன் தம்முடைய வார்த்தையினாலே இந்த உலகத்தையும் அதிலுள்ள யாவையும் சிருஷ்டித்தார். கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது. (சங்–29:4–8). கர்த்தருடைய சத்தம் மகத்துவமுள்ளது. கர்த்தருடைய சத்தம் கேதுரு மரங்களை முறிக்கிறது. கர்த்தருடைய சத்தம் அக்கினி ஜுவாலைகளைப் பிளக்கும். கர்த்தருடைய சத்தம் வனாந்திரத்தை அதிரப்பண்ணும்.

மத்தேயு–8:5–13 மற்றும் லூக்கா–7:2–10 வசனத்திலும் ரோம இராணுவப் படையில் திறமை மிகுந்தவனாயும், சுமார் 20 வருடங்களுக்கு மேலாக அனுபவம் பெற்றிருந்து, நூறு பேருக்கு அதிகாரியாக இருந்த நூற்றுக்கு அதிபதி தன் வேலைக்காரனுடைய சுகத்திற்காக இயேசுவிடம் வந்து **“ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும்”** என்று வேண்டிக் கொள்வதைப் பார்க்கிறோம். இந்த நூற்றுக்கு அதிபதியினிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய அநேகக் காரியங்கள் உள்ளது. ஆகையால் இப்பொழுது நாம் அவற்றை பார்ப்போம்.

## 1. நூற்றுக்கு அதிபதி தாழ்மையுள்ளவன்.

வேதாகமத்தில் பரிசேயன் மற்றும் ஆயக்காரனைப் பற்றி இயேசு கூறிய உவமையில் பரிசேயன் தனது ஜெபத்தில் தன்னை மிகவும் உயர்த்தி நீதிமானாகக் காட்டினான். ஆனால் ஆயக்காரனோ தேவனே பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்று சொல்லி தன்னை தாழ்த்தி ஜெபித்தான். ஜெபம் செய்த இரண்டு பேரில் ஆயக்காரன் தான் நீதிமானாக்கப்பட்டவனாய் தன் வீட்டிற்கு திரும்பினான் என்று பார்க்கிறோம். ஏனெனில் தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

நூற்றுக்கு அதிபதியும் இயேசுவுக்கு முன் தன்னை தாழ்த்தினான். தான் நூற்றுக்கு அதிபதியாக இருந்தாலும், இயேசுவை சர்வ வல்லமையுள்ளவர் என்று அறிந்திருந்தான். நான் தகுதியற்றவன். அவர் பெரியவர், பரிசுத்தர் என்றும், நான் அவருக்கு முன்னால் ஒன்றுமில்லை என்றும் தன்னை தாழ்த்துகிறான். ஆகையால் தான் அவன் இயேசுவைப் பார்த்து கூறினான். “ஆண்டவரே ! நீர் என் வீட்டிற்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல” என்று கூறுவதைப் பார்க்கிறோம். மத்தேயு–8:9–ல் கூறப்பட்டுள்ளது, நான் ஒருவனை போ என்றால் போகிறான், ஒருவனை வா என்றால் வருகிறான், இதைச் செய்யென்றால் செய்கிறான். இந்த அளவுக்கு அதிகாரம் உடையவனாய் இருந்தாலும் கூட தன் ஸ்தானத்திலிருந்து இறங்கி, தன்னைத் தாழ்த்தி இயேசுவை உயர்த்துகிறான். **“தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.”**

## 2. நூற்றுக்கு அதிபதி இயேசுவின் கட்டளையின்படி நடந்தவன்.

லூக்கா–10:27–ல் "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் உன் முழு சிந்தையோடும் அன்பு கூர்ந்து, உன்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக" என்று எழுதியிருக்கிறது. இந்த நூற்றுக்கு அதிபதி தேவனிடத்தில் அன்பு கூர்ந்து, ஜனங்கள் ஆராதிக்க ஜெப ஆலயத்தைக் கட்டிக் கொடுத்தான். மட்டுமல்லாமல் இந்த நூற்றுக்கு அதிபதி உன்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்ற கட்டளையின்படி, பிறனை நேசிக்கிறவனாகவும் இருந்தான். லூக்கா–7:2–ல் நூற்றுக்கு அதிபதியினுடைய வேலைக்காரனைப் பற்றி கூறும்போது, "அவருக்கு பிரியமான வேலைக்காரன்" என்று கூறப்பட்டுள்ளது. பாருங்கள், ஒரு வேலைக்காரனை எவ்வளவாய் நேசித்திருக்கிறான் என்று தெரிய வருகிறது. வேலைக்காரனோ வியாதிப்படுக்கையில், திமிர்வாதத்தில் கொடிய வேதனையில் மரண அவஸ்தையாயிருக்கிறான். இனிமேல் இவனால் எந்த பிரயோஜனமும் கிடையாது. இப்படிப்பட்ட நேரத்திலும் கூட இவனை ஒதுக்கி விடாமல், இவனுக்காக இவனுடைய சுகத்திற்காக பிழைக்க வேண்டும் என்று இயேசுவிடம் வந்து வேண்டிக்கொள்வதைப் பார்க்கிறோம். வேலைக்காரன் மீது எவ்வளவு அன்பு பாருங்கள். உன்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்புகூறுவாயாக ! என்ற கட்டளையின்படி நடந்தான்.

## 3. நூற்றுக்கு அதிபதி விசுவாசத்தில் பெரியவன்.

மத்தேயு–8:10–ல் நூற்றுக்கதிபதியினுடைய விசுவாசத்தைக் குறித்து இயேசுவே ஆச்சரியப்படுகிறார். மட்டுமல்லாமல் இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார். இயேசுவினுடைய வார்த்தையில் வல்லமை உண்டு என்று விசுவாசித்தான். ஆகையால் தான் அவன் "ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" என்றான். பின்பு 13–ம் வசனத்தில், நீ போகலாம் நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்.

யாக்கோபு–1:6–8 வசனத்தில் கூறப்பட்டுள்ளது "எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்கு கொடுக்கப்படும்." உதாரணமாக, பீல் மக்களுக்கு அவிசுவாசிக்க தெரியாது. விசுவாசிக்க மட்டும் தான் தெரியும். இயேசு இப்படி ஒரு அற்புதம் செய்தார் என்று வேதத்திலிருந்து எடுத்து கூறும்போது, அவர்கள் அதை அப்படியே ஏற்றுக் கொண்டு விசுவாசிக்கிறார்கள். பின்பு தங்கள் அன்றாட வாழ்க்கையில் அதை அப்பியாசப்படுத்தி பார்த்து, தாங்களே ஜெபித்து தேவனிடத்திலிருந்து அற்புதத்தைப் பெற்றுக் கொண்டு, பின்பு சபையின் ஞாயிறு ஆராதனையில் சாட்சிக் கூறி ஸ்தோத்திரக் காணிக்கைகளை படைக்கிறார்கள். இயேசு கறிஸ்து அநேக இடங்களில் அற்புத சுகத்தை அளிக்கும் போது **"உன் விசுவாசம் பெரிது"** என்றும் **"உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது"** என்றும் **"நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது"** என்றும், **"நீ விசுவாசித்தால் தேவனுடைய**

**மகிமையைக் காண்பாய்"** என்றும் விசுவாசத்தைக் குறித்து கூறியுள்ளதை வேதத்தில் பார்க்கிறோம். நூற்றுக்கு அதிபதியினுடைய விசுவாசத்தின் மூலம் அன்று அவனுடைய வேலைக்காரன் சொஸ்தமானான். மட்டுமல்லாமல் இயேசுவே இவனுடைய விசுவாசத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டார். இஸ்ரவேலருக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்றார். இன்று நம்முடைய விசுவாசம் எப்படிப்பட்டதாய் இருக்கிறது? உன்னுடைய விசுவாசத்தைக் கண்டு தேவன் உனக்கு அற்புதம் செய்கிறாரா? நாமும் விசுவாசிப்போம். அற்புதங்களைப் பெற்றுக் கொள்வோம்.

## 4. நூற்றுக்கு அதிபதி ஜெப ஆலயத்தைக் கட்டி கொடுத்தான்.

லூக்கா–7:5–ல் கூறப்பட்டுள்ளது, அவன் நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான். நமக்கு ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டினான் என்றார்கள். ஆகையால் அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவரைக் கருத்தாய் வேண்டிக் கொண்டு, நீர் இந்த தயவு செய்கிறதற்கு அவன் பாத்திரவானாயிருக்கிறான் என்றார்கள்.

**பிரியமானவர்களே!** நாம் தேவனுக்காக, மக்களுக்காக நல்ல காரியங்களை செய்யும் போது, தேவன் நம்முடைய காரியங்களில் அக்கறையுள்ளவராயிருக்கிறார். நமக்கு அற்புதம் செய்ய ஆர்வமுள்ளவராய் இருக்கிறார். இன்றும் கூட, நமது ஷாலோம் ஊழியத்தில் மரத்தின் நிழலிலும் சிறிய குடிசைகளிலும், மண் வீடுகளிலும் எந்தவித வசதிகளும் இல்லாமல் ஞாயிறு ஆராதனை செய்து வருகிற விசுவாசிகளின் மீது கரிசனைக் கொண்டு, அன்பு செலுத்தி எத்தனையோ பேர் ஜெப ஆலயத்தைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதினிமித்தம் தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதங்களையும் பெற்றிருக்கிறார்கள். நீங்கள் தேவனுக்காக செய்த நல்ல காரியங்களை மறப்பதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே. அவர் நிச்சயமாய் உங்களுக்கு அற்புதம் செய்வார்.

கடைசியாக, நாமும் கூட எவ்வளவு பெரிய ஸ்தானத்தில் இருந்தாலும், எவ்வளவாய் கர்த்தர் நம்மை உயர்த்தி, மேன்மைப்படுத்தி வைத்திருந்தாலும், எவ்வளவாய் நம்மை ஆசீர்வதித்திருந்தாலும், நாம் தேவனுக்கு முன்பாக நம்மை தாழ்த்த வேண்டும். தேவனுடைய கட்டளைகளின்படி நடக்க வேண்டும். மற்றவர்களை நேசித்து, அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். மற்றும் தேவனிடத்தில் எவ்வளவேனும் சந்தேகப்படாமல் விசுவாசம் வைத்து, அற்புதங்களை பெற வேண்டும். மேலும் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்ய வேண்டும். இப்படி செய்யும் போது, உன்னுடைய வாழ்க்கையில் கஷ்டங்கள், துன்பங்கள், வேதனைகள், பிரச்சனைகள், வியாதிகள் வரும் போது இயேசுவை நோக்கிப் பார்த்து, **"ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும்"** என்று ஜெபித்தால், தேவன் நிச்சயமாக உனக்கு அற்புதம் செய்வார். உன்னுடைய வேதனை துக்கம் எல்லாவற்றையும் களிப்பாய் மாற்றுவார். உன் கண்ணீரைத் துடைப்பார். உன் வாழ்க்கையை ஆசீர்வதிப்பார். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்! **ஆமென்.**

***பீல் ஆதிவாசி ஜனங்கள் மத்தியில் நடைபெறும் ஷாலோம் ஊழியங்களின் பிராந்தியங்களுக்காக கருத்தாய் ஜெபியுங்கள்.***

| ***மாநிலம்*** | ***மாவட்டம்*** | **ஊழியம் நடைபெறும் தாலுகாக்கள்** |
|---|---|---|
| ***குஜராத்*** | ***தாகோத்*** | தாகோத், ஜாலோத் பத்தேபூரா, லிம்கேடா கர்பாடா, தான்பூர், பாரியா |
| | ***பரோடா*** | சோட்டா உதய்பூர், கவாண்ட் |
| ***மத்தியப்பிரதேசம்*** | ***அலிராஜ்பூர்*** | பாபரா, ஜோபட் அலிராஜ்பூர், உதய்கட் |
| | ***படுவாணி*** | ராண்பூர், படுவாணி, |
| | ***ரத்லம்*** | பாஜ்னா |
| | ***தார்*** | தார் |
| | ***ஜாபுவா*** | ஜாபுவா, மேக்நகர் தாந்தலா, ராணாப்பூர் பேட்லாவத் |
| | ***சத்தர்பூர்*** | ராயி, பிஜாவர் |
| ***இராஜஸ்தான்*** | ***பான்ஸ்வாடா*** | குசல்கட், பாகிதோரா காட்டோல், கடி பான்ஸ்வாடா, |
| | ***உதய்பூர்*** | கேர்வாடா |
| | ***பிரதாப்கட்*** | பிரதாப்கட் |
| | ***டுங்கர்பூர்*** | டுங்கர்பூர் |

***"நான் மோசேக்குச் சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்". (யோசுவா 1 :3)***

# பீல் சுதேச ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

ஒரு ஜாதி மக்களை உனக்கு தருவேன்... உங்கள் மூலமாக ஒரு ஜாதி மக்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று அழைப்பு கொடுத்து பீல் மக்களை தரிசனமாக தந்து (ஒரு தமிழ் நாட்டு மிஷனெரியாக அனுப்பின தேவன்) கடந்த 23 ஆண்டுகள் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்களில் பரிசுத்த ஆவியானவரின் தெளிவான நடத்துதலின்படி பீல் மக்களையே சுதேச ஊழியர்களாக எழுப்ப கிருபை தந்து இதுவரை 500–க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்களை எழுப்ப, பயிற்சி கொடுக்க தேவன் கிருபை தந்தார். தேவனுடைய அநாதி திட்டப்படி பரிசுத்த ஆவியானவரால் மிக வல்லமையாக ஒவ்வொருவருடைய சொந்த கிராமங்களிலும் சுற்றியுள்ள கிராமங்களிலும் பயன் படுத்தப்பட்டு வருகிறார்கள். தேவன் பீல் சுதேச ஊழியர்கள் மூலமாக 600–க்கும் அதிகமான கிராம ஷாலோம் சபைகளையும்; இலட்சத்துக்கு அதிகமான ஆத்துமாக்களையும் தேவன் தந்த படியால் பீல் சுதேச ஊழியர்களுக்காக தேவனை துதிப்போமாக. மேலும் கருத்தாக தேவன் பயன்படுத்தும் எழுப்புதலின் பாத்திரமாக விளங்க கீழ்கண்ட காரியங்களுக்காக ஜெபிக்க கடமைப்பட்டுள்ளோம்.

- ✞ சுதேச ஊழியர்களின் பரிசுத்தமான வாழ்விற்காக; ஜெபத்திலும், வேதவாசிப்பிலும் உறுதியாய் தரித்திருக்கவும்.
- ✞ பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு அற்புத அடையாளங்களை தேவன் நடத்தவும்; நோய்கள், பிசாசின் பிடிகள், சாபத்திலிருந்தும் பாவங்களிலிருந்தும் சொந்த பீல் ஜனங்கள் இரட்சிக்கப்படவும்
- ✞ ஒவ்வொரு பீல் சுதேச ஊழியர்களுடைய சபையும் ஜெபிக்கும் சபையாக, ஆத்தும ஆதாயம் செய்யும் சபையாக தேவனுக்காக கொடுக்கிற சபையாக, கிறிஸ்துவின் சாட்சியுள்ள சபையாக ஊழியர்கள் உருவாக்கவும்.
- ✞ சுதேச ஊழியர்களின் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட, குறிப்பாக அவர்கள் பிள்ளைகள் இரட்சிக்கப்பட, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று சாட்சிகளாய் விளங்க, அவர்களுடைய படிப்பு, உயர்கல்வி, நல்ல உயர்ந்த வேலைவாய்ப்புகள் போன்ற சந்ததியின் ஆசீர்வாதங்களுக்காகவும்.
- ✞ தேவன் தாமே சுதேச ஊழியர்கள் குடும்பத்தில் அனைவருக்கும் நோய்கள் அணுகாமல் நல்ல சுகத்தையும், நீடித்த ஆயுளையும் தரும்படியாக; பிரயாணங்களில், ஊழியப்பாதையில் தெய்வீக பாதுகாப்பிற்காகவும், பிசாசின் தந்திர மோசங்களுக்கு விலக்கி பாதுகாக்கப்படவும்.
- ✞ ஒவ்வொரு சுதேச ஊழியர்களும் 2015–ம் ஆண்டில் இன்னும் ஒரு கிளை சபையை உருவாக்கவும்
- ✞ எத்தனை சுவிசேஷ எதிர்ப்புகள், பிரச்சனைகளை பிசாசானவன் கொண்டு வந்தாலும் ஆவியானவரின் பெலத்துடன் எதிர்நின்று ஜெயம் பெறவும்; மணவாட்டியாகிய சபையை கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தப்படுத்தவும் ஜெபியுங்கள்.
- ✞ ஒவ்வொரு சுதேச ஊழியரும் இந்த 2015ம் ஆண்டிற்குள் இன்னுமொரு கிளை சபையை உருவாக்கவும், ஊழியர்களை எழுப்பவும் ஜெபியுங்கள்.

சுதேச ஊழியரின் சாட்சி

# போதகர். தித்தா புரியா



**நாங்கன்கேடி,** மத்தியப்பிரதேசம்

நான் இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவன். இயேசுவை அறியாததற்கு முன் சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாகவும் அசுத்த ஆவிகளையும் விக்கிரகங்களையும் வணங்கி வந்தேன். இந்நிலையில் என்னுடைய மனைவி அடிக்கடி வியாதிப்படுவாள். அதினிமித்தம் உடல் முழுவதும் வீங்கி விடும், படபடப்பு ஏற்படும் மற்றும் எப்பொழுதும் காய்ச்சல் இருந்து கொண்டே இருக்கும். ஒரு வேலையும் செய்ய முடியாது. எல்லா வீட்டு வேலைகளையும் நானும் எனது பிள்ளைகளும் தான் கவனித்து கொண்டோம்.

அவளுடைய சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்து செலவு செய்தும் எந்த பலனுமில்லாமல் கடைசியில் என்ன செய்வதென்றே தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்த வேளையில் எனது மனைவியினுடைய தங்கை ஜத்னி பேன் ஷாலோம் மேந்திக்கேடா சபையின் விசுவாசியான ஒரு சகோதரி, இயேசுவைப் பற்றிக் கூறினாள். பின்பு எங்களை மேந்திக்கேடா ஷாலோம் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றாள். அங்கு ஊழியர் ராஜேஷ் பாய் எண்ணெய்ப் பூசி எனது மனைவிக்காக ஜெபித்த போது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் 1997–ல் இயேசுவை சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக் கொண்டோம். தொடர்ந்து குடும்பமாக ஆலயத்திற்குச் சென்று விசுவாசத்திலும், ஆவிக்குரிய வாழ்க்கையிலும் வளர்ந்தேன்.

பின்பு என்னைப் போன்று எனது கிராம மக்களும் இயேசுவை அறிய வேண்டுமென்ற பாரம் ஏற்பட்டு, என்னை ஊழியம் செய்ய அர்ப்பணித்தேன். பின்பு ஷாலோம் ஊழியத்தில் இணைந்து 1 மாத ஊழியப்பயிற்சி பெற்று, ஐ.ஊ.கூ ஒரு வருட பயிற்சி எடுத்து, எனது சொந்த கிராமமாகிய நாங்கன்கேடியிலும், மேந்திக்கேடாவிலும், ஃபுலேடி கிராமத்திலும் குடும்பமாக ஊழியம் செய்து வருகிறோம். தேவன் 80 குடும்பங்களை தந்துள்ளார். தேவன் எங்களுக்கு 6 பிள்ளைகளைக் கொடுத்திருக்கிறார். நாங்கள் குடும்பமாக இயேசுவுக்காக ஊழியம் செய்து வருகிறோம்.

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Industrial Employees Prayer Fellowship,** Chennai.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2500/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரதமெங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரைத் தாங்குவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

# திரளான அறுவடையை நோக்கி



2011ம் ஆண்டில் நவம்பர் மாதம் நடைபெற்ற பீல் சுதேச ஊழியர் குடும்ப முகாமில் **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களும் போதகர் **டேவிட் பிரகாசம்** அவர்களும் சிறப்பு செய்தியை வழங்கினார்கள். இறுதிநாள் இரவு அபிஷேக கூடுகையில் பரிசுத்த ஆவியானவர் **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் மூலமாக இதுவரை ஒரு லட்ச ஆத்துமாக்களை நான் கொடுத்திருக்கிறேன். ஆனால் இனிவரும் வருடங்களில் 10 மடங்காக 10 இலட்ச ஆத்துமாக்களை திரளான அறுவடையாக தருவேன் என்று திருவுளம் பற்றினார். அதற்காக தேவன் 24 ஊழியர் குடும்பங்களை விசேஷித்த சுவிசேஷ அபிஷேகத்தாலும், வல்லமை வரங்களினாலும் நிரப்புவேன். தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட 24 குடும்பங்களை தேவன் முன்னாக அழைக்கிறார் என்று ஆவியானவர் அழைப்பு தந்தபோது 480 சுதேச ஊழியர்கள் குடும்பமாக ஆவியில் நிறைந்து ஜெபித்து கொண்டிருக்கும் போது சரியாக 24 கணவன்மார்கள்; பெண்கள் வரிசையில் சரியாக அவர்கள் மனைவிமார்களும் முன்னாக வந்து ஒப்புக் கொடுத்தது மகிமையான சாட்சியாக இருந்தது.

ஆவியானவரின் ஆலோசனைபடி 2012ம் ஆண்டு ஜுன் மாதம் அந்த 24 குடும்பங்களுக்கு நாலுமாவடியில் சிறப்பு அபிஷேக கூடுகை 5 நாட்கள் நடைபெற்றது. அவர்கள் 12 குழுவாக பிரிக்கப்பட்டு 12 குழுக்களுக்கும் இயேசு விடுவிக்கிறார் சார்பில் டாடாமேஜிக் வாகனம், ஜெனரேட்டர், ஆம்பளிபயர், சவுண்ட்சிஸ்டம், மைக்குகள் மற்றும் கேமராக்கள் வழங்கப்பட்டது.

கடந்த 30 மாதங்களாக ஒவ்வொரு மாதமும் இவர்கள் 12 குழுக்களாக 2ம், 3ம், 4ம் வெள்ளிக்கிழமைகளில் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் 16 நற்செய்தி கூட்டங்களாக மாதந்தோறும் 48 கூட்டங்களாக வருடத்திற்கு குறைந்தது 500 நற்செய்தி கூட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

இதில் பலவிதமான நோய்கள், கேன்சர் கட்டிகளிலிருந்தும் அற்புத சுகம் பெற்றார்கள். சிலர் மரணத்திலிருந்து ஜீவனைப் பெற்றார்கள். அசுத்த ஆவியிலிருந்து விடுதலை பெற்றார்கள். பாவத்திலிருந்து பரிசுத்தத்திற்கு நேராக நடத்தப்பட்டார்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் பெற்றார்கள். தேவன் இவர்களை வல்லமையான அபிஷேகர்களாக பயன்படுத்தி பலநூறு கிராமங்களை சந்தித்து வருகிறார். 2014ம் ஆண்டில் 543 கிராமங்களில் நற்செய்தி கூட்டங்கள் நடத்தப்பட்டு, 6709 அற்புதங்கள் நடைபெற்றது. 1961 குடும்பங்கள் புதிதாக சபையில் சேர்க்கப்பட்டார்கள்.

2015ம் ஆண்டில் ஒவ்வொரு மாதம் 2ம், 3ம், 4ம் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் 48 நற்செய்திக் கூட்டங்களுக்காகவும், தேவன் சுதேச ஊழியர்களை வல்லமையாக பயன்படுத்தவும், திரளான ஜனங்கள் பங்கு பெறவும், எதிர்ப்புகள் நீங்கவும், தேவ பாதுகாவலுக்காகவும், ஜெபியுங்கள்.

## பத்து லட்ச ஆத்தும அறுவடைத் திட்டத்தின் மூலம் நடத்தப்படும் சுகமளிக்கும் ஆராதனைகளில் நிகழ்ந்த அற்புத சாட்சிகளில் ஒரு சில...



பெயர் : **ஜபு பேன் புரியா,**

ஊர் : படா கோசல்யா, மத்தியப்பிரதேசம்

எனது பெயர் ஜபு பேன். நான் கடந்த 5 வருடங்களாக உதிரப்போக்கினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். எனது சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் செய்தும் குணமாகவில்லை. மருத்துவம் பார்த்தும் சுகமாகவில்லை. இந்நிலையில் அந்தர்வேலியா ஆலயத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் பங்கு பெற்றேன். அங்கு ஊழியர் இறுதியில் வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்த வேளையில் தேவன் எனக்கு சுகத்தைக் கொடுத்தார். **தேவனுக்கே மகிமை!**

---



பெயர் : **கமலா பேன்**

ஊர் : காஸ்லா, இராஜஸ்தான்

எனது பெயர் கமலா பேன். எனக்கு 1 வருடமாக எனது 2 கால்களும் வீங்கி இருந்தது. இதனால் நான் மிகவும் கஷ்டப்பட்டேன். என்னால் நடக்கவோ நீண்ட நேரம் அமரவோ முடியாமல் மிகவும் வேதனையோடு இருந்தேன்.

இந்நிலையில் பேடவ் கிராமத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் பங்கு பெற்றேன். அங்கு போதகர் வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்த போது எனது கால்களில் இருந்த வீக்கம் வற்றிப் போயிற்று. **இப்போது என்னால் நன்றாக நடக்க முடிகிறது. இயேசுவுக்கு நன்றி!**

---



பெயர் : **ஜோர்சிங் பாய்**

ஊர் : சிமளியா, மத்தியப்பிரதேசம்

எனது பெயர் ஜோர்சிங் பாய். எனக்கு 2 மாதங்களாக தொண்டையில் கட்டி இருந்தது. என்னால் தண்ணீர் கூட சரியாக குடிக்க முடியாது, உணவும் சாப்பிட முடியாது. மிகவும் வேதனைப்பட்டேன். பிறகு பாடல்வா கிராம ஆலயத்தில் நடைபெறும் சுகமளிக்கும் கூட்டத்தைக் குறித்து கேள்விப்பட்டு, கலந்து கொண்டேன். இந்த கூட்டத்தில் ஊழியர் எனக்காக ஜெபித்த போது எனது தொண்டையிலிருந்த கட்டி மறைந்து போனது. தற்போது நான் பரிபூரண சுகத்தைப் பெற்றுக்கொண்டேன். இப்போது என்னால் தண்ணீர் நன்றாக குடிக்க முடிகிறது. **எனக்கு சுகம் கொடுத்த இயேசுவுக்கு நன்றி!**

# ஷாலோம் - வேத வினாப் போட்டி 21

**பதில் எழுதுக :**

1. முதலாவது ஒரு திராட்சத் தோட்டத்தை நாட்டினவன் யார்?
2. "ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன்" வாசிப்பது எங்கே?
3. எது திரளான பாவங்களை மூடும்?
4. ஏரோதின் காரியக்காரன் யார்?
5. மழையில்லாத மேகங்களைப் போல இருப்பவர்கள் யார்?
6. எந்தக் காற்று மழையைப் பிறப்பிக்கும்?
7. ஆறுதலின் மகன் யார்?
8. யாருடைய கை செல்வத்தை உண்டாக்கும்?
9. இடதுகை பழக்கமுள்ள இரட்சகன் யார்?
10. கடலைத் தைலம் போல் கலக்கி விடுவது எது?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **17.03.2015**

**கடந்த ஜனவரி மாத வேத வினா போட்டி எண் 20க்கான சரியான விடைகள் :**

1. உங்களை நிந்திக்கிறவர்களுக்காக. லூக். 628
2. மாயக்காரனின். யோபு 20 : 4
3. யோவாஸ். 2 இராஜா. 11 : 21
4. 40 வருஷம். 1 இராஜா. 11 : 42
4. கீலேத்தியனான யெப்தா. நியா. 11 : 1
5. பிலிப்பு. யோவான் 14 : 8
7. செசரியா. அப். 10 : 1
8. கோபாக்கினையை. ரோமர் 4 : 15
9. லௌகிக துக்கம். 2 கொரி. 7 : 10
10. சாத்தான். 2 கொரி. 11 : 14

**கடந்த ஜனவரி மாத வேத வினாப் போட்டி எண் 20 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 12 நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. Sis. சுமித்ரா டேவிட், சென்னை. 2. Bro. சாலமோன் ராஜ், கொட்டாரம்.**
**3. Sis. ரூத் ஜெயராணி அன்புராஜ், பாளையங்கோட்டை.**

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

## அருப்புக்கோட்டை, சகோ. V. ஸ்டான்லி ஜோன்ஸ் அவர்கள் (பேராயர். தேவதாஸ் அவர்களின் மூத்த சகோதரன்) குடும்பத்தாரின் பணித்தள வருகை

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள். கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த ஜனவரி மாதம் 2015–ஆம் ஆண்டில் 9,10,11 ஆகிய தேதிகளில் அருப்புக்கோட்டையில் இருந்து நானும் என் மனைவியும் ஷாலோம் பணித்தளத்தைப் பார்வையிட தேவன் கிருபைச் செய்தார். நான், என் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் ஏற்கனவே 20 ஆண்டுகளுக்கு முன்பு ஜாலோத் பணித்தளத்திற்கு என் அன்பு தம்பி பிஷப் **Rt. Rev. Dr. V. தேவதாஸ்** மற்றும் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களையும் பார்க்க வந்தோம். **"அன்பு பகிர்வு இயக்கம்"** பத்திரிகை மற்றும் செய்திகள் வாயிலாக ஷாலோம் திருச்சபையின் வளர்ச்சியை நாங்கள் ஆர்வத்தோடு படித்து தெரிந்துக் கொண்டாலும், நேரில் சென்று பார்க்க வேண்டும் என்ற எங்களுடைய வாஞ்சையை தேவன் நிறைவேற்றினார். இயேசு கிறிஸ்துவுக்கே மகிமை உண்டாவதாக !

ஜனவரி 9–ஆம் தேதி வெள்ளிக்கிழமை குஜராத் மாநிலத்தில் உள்ள பாறைவா மற்றும் கொலானா ஆகிய கிராம சபைகளின் ஆலயங்களுக்குச் சென்று சபை போதகர்களின் குடும்பங்களையும், அங்கு சுற்றிலும் இருக்கும் விசுவாசிகளையும் சந்தித்தோம். அவர்கள் மிகவும் அன்புடன் வரவேற்றனர். **சகோ. சாமுவேல்** அவர்கள் எங்களுடன் மூன்று நாட்களாக உடன் வந்து, பணித்தளங்களைப் பற்றி மிகவும் உற்சாகத்துடனும், தரிசனத்துடனும் கூறினார்கள். நாங்கள் இந்த ஆலயங்களில் ஜெபித்துவிட்டு, இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள கோய்க்கா மற்றும் கும்புரா என்ற இடங்களில் உள்ள ஆலயங்களுக்கு சென்றபோது, தேவனுடைய அதிசயமான வழிநடத்துதலைக் குறித்து சபை போதகர்கள் மூலமாகக் கேள்விப்பட்டு ஆண்டவருக்கு நன்றி செலுத்தினோம். அடுத்து, இராஜஸ்தான் மாநிலம் பிஜல்பூர் என்னுமிடத்தில் ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக நடத்தப்படும் ஷாலோம் பள்ளியைக் காணச் சென்றோம். பள்ளி முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் படிக்கும் மாணவர்கள் கொடுத்த வரவேற்பும், சிறுவர்களின் பாடல்களும் எங்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. இந்த பள்ளியில் புதிய வகுப்பறைகள், விடுதிகள் கட்டப்பட நாங்கள் ஆண்டவரிடம் ஜெபித்தோம்.

பின்பு இராஜஸ்தான் மாநில ஆலய போதகர்கள் கூடுகை மற்றும் புத்தாண்டு ஸ்தோத்திரக் கூட்டத்தில் கலந்துக் கொண்டோம். அங்கு எங்களுக்கு கலாச்சார முறையில் வரவேற்பு கொடுத்தார்கள். கூட்டம் மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது.

மறுநாள் ஜனவரி 10–ஆம் தேதி சனிக்கிழமை தெல்சர், போர்டி மற்றும் தனசியா ஆகிய பணித்தளத்தில் உள்ள ஆலயங்களுக்கு சென்று சபை போதகர்களுடன் ஷாலோம் ஊழியத்திற்காக ஜெபித்தோம். அதன்பின் ஜெரி என்ற கிராமத்தில் உள்ள Compassionate centre for Children Project–ஐ பார்வையிட்டோம். மாணவர்கள் உற்சாகமாக பாடல்கள் பாடி, வசனங்கள் கூறி தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். அன்று மாலையில் ஷாலோம் Training Centre–ல் பணித்தள அலுவலக ஊழியர்களுக்கு நடைபெற்றக் கூட்டத்தில் கலந்துக் கொள்ள தேவன் கிருபைச் செய்தார்.

மறுநாள் ஜனவரி 11–ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் உள்ள தேமாரா, மான்லி, நெகடியா மற்றும் மேந்திகேடா ஆகிய பணித்தளங்களையும், ஆலயங்களையும் காண தேவன் கிருபைச் செய்தார். எல்லா ஆலயங்களிலும் பாடலோடு துதிசெலுத்தி, ஆண்டவரை போற்றினார்கள். நாங்களும் எல்லா ஆலயத்திலும் ஜெபித்துவிட்டு வந்தோம். மதியம் அந்தர்வேலியா என்ற கிராமத்தில் உள்ள பெரிய ஆலயத்தில் ஞாயிறு ஆராதனையில் கலந்துக் கொள்ள கர்த்தர் எங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தார். **பேராயர். தேவதாஸ்** மற்றும் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களும் ஆராதனையை வழிநடத்தினார்கள். துதி ஆராதனை வேளையில் தேவ பிரசன்னம் இறங்கி வந்தது. அனைவருக்கும் கூட்டம் ஆசீர்வாதமாக இருந்தது. பேராயர் குடும்பத்திற்கும், எங்களுக்கும் சிறப்பு கலாச்சார வரவேற்பு அளிக்கப்பட்டது. தேவனுக்கே எல்லா மகிமையும் கனமும் உண்டாவதாக!

இந்த மூன்று நாட்கள் பணித்தளத்தில் இருக்கும்போது, கடைசிகால எழுப்புதலையும், கர்த்தரின் மிகப் பயங்கரமான வல்லமையையும், பரிசுத்த ஆவியானவரின் பலத்தக் கிரியையையும், அற்புதங்களையும், அதிசயங்களையும் தேவன் காணச் செய்தார். அதற்கு பீல் மக்களே சாட்சியாக உள்ளனர். ஊழியர்களும், பீல் மக்களும் பரிசுத்த ஆவியினால் நிறைந்து, பாடல்கள் பாடி, நடனமாடி, அந்நியபாஷைகளை பேசி, கண்ணீருடன் ஜெபிப்பதையும் கண்டு எங்கள் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து தேவனை ஸ்தோத்தரித்தோம்.

உத்தமமும் உண்மையுமாய் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து அவர் சித்தத்தின்படி நடக்கின்ற ஷாலோம் மிஷனெரி இயக்கத்தின் பேராயர் அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தினர் யாவருக்கும் நல்ல சுகத்தையும், பெலத்தையும், பாதுகாவலையும் கொடுக்க ஆண்டவரிடம் நாங்கள் ஜெபம் செய்கின்றோம். மேலும் இந்த ஊழியத்தைத் தாங்குகின்ற தேவனுடைய பிள்ளைகளுக்காகவும், மிகுந்த அர்ப்பணிப்புடன் தேவனுக்காக ஊழியம் செய்யும் தேவனுடைய பிள்ளைகளுக்காகவும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துகின்றோம். விரைவில் அனைத்து பீல் மக்களையும் தேவனுடைய சபையில் ஆண்டவர் கூட்டிச் சேர்ப்பார் என விசுவாசிக்கின்றோம். **தேவனுக்கே மகிமை!**

## தென்னிந்திய திருச்சபை சென்னைப் பேராயம்

நேதாஜி நகர் குருசேகரம்

### C.S.I. கிறிஸ்துநாதர் ஆலயம்



## சிலுவை தியானக் கூட்டம் - 2015

**இடம் : C.S.I. கிறிஸ்து நாதர் ஆலயம்,**
நேதாஜி நகர், 1வது தெரு, தண்டையார்பேட்டை, சென்னை–81

நாள் : **2015 மார்ச் 13,14,15 – வெள்ளி, சனி, ஞாயிறு**
நேரம் : தினமும் மாலை 6.30 மணிக்கு

நற்செய்தி வழங்குபவர் :
**பேராயர். *V.* தேவதாஸ்**
அன்பு பகிர்வு இயக்கம், குஜராத்

# சகோ. ஸ்டான்லி ஜோன்ஸ் அவர்கள் குடும்பத்தாரின் பணித்தள வருகை
## (பேராயர் தேவதாஸ் அவர்களின் மூத்த சகோதரன்)




கலாச்சார வரவேற்பு




பகிர்வு வேளை – சகோ. ஸ்டான்லி ஜோன்ஸ் அவர்கள்



பகிர்வு வேளை – சகோதரி. ஜொலிஸ் பாப்பு அவர்கள்



பாரேவா (குஜராத்) கிராம ஆலயத்திற்கு முன்பாக



அந்தர்வேலியா (ம.பி.) கிராம ஆலய ஆராதனையில்



தெமோரா, (ம.பி.) கிராம ஆலயத்திற்கு முன்பு



ஷாலோம் விடுதி மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்படுகிறது



பிஜல்பூர் விடுதி & பள்ளி மாணவ மாணவிகளுடன்

# அபிஷேக ஆராதனைக்கு கிராமிய இசைக்கருவிகள் தேவை



தேவகிருபையால் இதுவரை 600க்கும் அதிகமான பீல் கிராமங்களில் வாரந்தோறும் ஆராதனை நடைபெற்று வருகிறது. சாராயம் காய்ச்சி, குடித்து,வெறித்து, அசுத்த ஆவியால் கட்டப்பட்டு, சாபத்தில் வாழ்ந்த பீல் மக்கள், இயேசுகிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்று பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் நிறைவுடன் பீலி, பிலோடி, வாகுடி பாஷைகளில் கிராமிய இராகங்களில் பாடல்களை இயற்றி தேவனை துதித்துப் பாடுவார்கள். பொது ஆராதனைகளிலும்; விசேஷித்த கூட்டங்களிலும் குறைந்தது 2 மணி நேரம் நடனமாடி துதித்து பின்பு பயபக்தியுடன் தேவ அன்பை உணர்ந்தவர்களாய் ஆராதனை செய்து இறுதியாக கண்ணீருடன் தங்களை தேவனுக்கு ஒப்புக் கொடுப்பார்கள்.

இப்படிப்பட்ட ஜீவனுள்ள ஆராதனை நடத்துவதற்கு கிராமங்களில் டோலக், தபேலா, ஜால்ரா, குகரா, மஞ்சரி, சில்தி போன்ற இசைக்கருவிகளை மீட்டு பாடுவார்கள். பெரும்பாலான கிராமங்களில் மின்சார வசதிகள் கிடையாது. ஆகவே மைக், ஆம்பிளி பயர், ஸ்பீக்கர் பாக்ஸ், கீ–போர்ட், கிட்டார் போன்ற இசைக்கருவிகளை பயன்படுத்த முடியாது. சபை ஆத்துமாக்களால் நிரம்பி வழியும் போது பிரசங்கம் செய்யும் வார்த்தை பாடல்களை விசுவாசிகள் கேட்பதும் கஷ்டமாக இருக்கும். குறிப்பாக நானும் என் மனைவியும் செல்லும் அநேக கிராமங்களில் இசைக்கருவிகளும் ஒலிபெருக்கி சாதனங்களும் இல்லாமல் நாங்களே அதிகமாக கஷ்டப்படுவோம். எங்களுக்கு என்று பேட்டரி உள்ளடங்கிய Stranger ஒன்றை பயன்படுத்துகிறோம்.

இவ்வருடத்தில் 600 கிராமங்களில் நடைபெறும் ஆராதனைகளை உற்சாகப்படுத்த ரூ.3500 மதிப்பில் கிராமிய இசைக்கருவிகளும், ரூ.6500 மதிப்பில் பேட்டரியுடன் கூடிய Stranger (ஆம்பிளிபயர் உடன்கூடிய ஸ்பீக்கர்பாக்ஸ்) வழங்க ஜெபத்துடன் தீர்மானித்துள்ளோம். நம் ஆலயங்களில் நமக்கு மின்சார வசதியும், பல இசைக்கான உபகரணங்களையும் நல்ல PA System தந்திருக்கிறபடியால் தேவனைத் துதிப்போம்.







நம் ஷாலோம் சபைகளில் இவ்வருடம் 500 சபைகளுக்கு ரூ.3500 மதிப்பில் கிராமிய இசைக்கருவிகள் அல்லது ரூ. 6500 மதிப்பில் பேட்டரி உள்ளடங்கிய Stranger உங்கள் குடும்பத்தின் சார்பில், சபை சார்பில், ஜெபக்குழு மற்றும் ஊழியத்தின் சார்பில் ஒன்று அல்லது அதற்கு அதிகமாக ஜெபித்து, வாங்கி வழங்க முன் வாருங்கள். இரண்டும் சேர்த்து ரூ. 10,000 கொடுத்து ஒரு சபைக்கு வழங்கலாம். நீங்கள் கொடுக்கும் காணிக்கை மூலமாக எந்த சபைக்கு, எந்த ஊழியரிடம் இந்த உபகரணங்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை உங்களுக்கு தெரிவிக்கும்படியாக வீடியோ DVD, போட்டோக்கள் மற்றும் அறிக்கைகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து அவர்களுக்காக ஜெபிப்பதற்காக விவரங்களையும் 2 வாரங்களுக்குள் அனுப்பி வைக்கிறோம்.

குறிப்பாக பீல் சுதேச ஊழியரைத் தாங்கும் குடும்பத்தார், சபையார், குழுவினர்கள் மற்றும் ஆலயம் கட்டி கொடுத்தவர்கள் விசேஷமாக உதவி செய்ய முன்வாருங்கள். குறிப்பாக நிதி உதவியை இசைக்கருவிகளுக்கு ரூ. 3500/– ரூ. 6500/– அல்லது இரண்டும் சேர்த்து ரூ. 10,000 "ஷாலோம் கிராம ஆலய ஆராதனைக்காக" என குறிப்பிட்டு அனுப்பவும். உபகரணங்களை நாங்கள் இங்கு குஜராத்தில் தாகோத்தில் கியாரண்டியுடன் சர்வீஸ் வசதியுடன் வாங்கி கொடுத்து விடுகிறோம். தேவன் தாமே உங்களை அபரிவிதமாக ஆசீர்வதிப்பாராக!

**"...உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே."** எபிரெயர் 6:10

தூத்துக்குடி W.M.E. சபைப் போதகர் **Pr.** எட்வர்ட் சாம்ராஜ் அவர்கள் மூலம்

## பணித்தளத்திற்கு வழங்கப்பட்ட PA SYSTEM



தேவனுக்கே மகிமை உண்டாவதாக! தூத்துக்குடி W.M.E. சபைப் போதகர் **Pr.** எட்வர்ட் சாம்ராஜ் அவர்கள் நமது ஷாலோம் ஊழியங்களை நேசித்து ஜெபித்துத் தாங்கி வருகிறார்கள். தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் பிஷப் தேவதாஸ் அவர்களை நேரில் சந்தித்து, தரமான **PA System** ஒன்றைஷாலோம் பணித்தள ஊழியங்களுக்காக வழங்கினார்கள். இதை போதகர் & பிஷப் இருவரும் சேர்ந்து ஜெபித்து பிரதிஷ்டை செய்தார்கள்.



# எழுந்து கட்டுவோம் வாருங்கள்

தேவனுடைய பெரிதான கிருபையினால் இதுவரை சுமார் 1 இலட்சத்திற்கும் அதிகமான ஆத்துமாக்கள் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு திருச்சபையில் சேர்ந்துள்ளார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து திருமுழுக்குப் பெற்றவர்கள் வாரந்தோறும் 620 கிராமங்களில் கூடி ஆராதிக்கிறார்கள். இதுவரை 262 கிராம ஆலயங்கள் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. 20.11.2009 அன்று தேவக் கிருபையால் திருச்சபைகள் திருமண்டலமாக (Shalom Diocese In India) உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தேவனுக்கே மகிமை!

## செய்யவேண்டிய வேலையோ மிகப் பெரியது

தேவக் கிருபையால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட 500 க்கும் அதிகமான நம் பீல் சுதேச மிஷனெரிகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டவர்களாய் நற்செய்தியை அறிவித்து பாவங்கள், சாபங்கள் நோய்களிலிருந்து மக்கள் திரளாக கிராமம் கிராமங்களாய் இயேசுவைச் சொந்த இரட்சகராய் ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள். 600 க்கும் அதிகமான கிராமங்களில் சபைகள் கூடி ஆராதனை நடைபெற்று வருகிறது. இந்த வருடத்தில் குறைந்தது 100 கிராமங்களில் ஆலயங்களைக் கட்ட திறந்த வாசல்களையும், வாய்ப்புகளையும் தேவன் தந்துள்ளார்.

மேலும் 7000 கிராமங்களில் வாழும் பீல் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க விசேஷ அபிஷேகம் பெற்ற48 சுதேச ஊழியர்கள் 12 குழுக்களாக மாதந்தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை 48 கிராமங்களில் நடத்துகிறநற்செய்திக் கூட்டங்கள் மூலமாக தேவன் பல அற்புத அடையாளங்களை நடத்தி வருகிறார். அதன் மூலமாக ஒவ்வொரு மாதமும் பல நூறு குடும்பங்கள் தேவனை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

25 குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட பின்பு 7 மூப்பர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. சுதேச ஊழியர் தன்னுடைய நிலத்தை ஆலயம் கட்டுவதற்குக் கொடுக்க முன் வருகிறார்கள். குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் 30 x 18, 40 x 20, 50 x 20 அளவுகளில் முறையே 2 இலட்சங்கள், 3 இலட்சங்கள், 5 இலட்சங்கள் நிதி உதவி கொடுத்து ஆலயம் கட்டித் தரும் ஆதரவாளர்கள் தேவை. நீங்கள் சபையாக, குழுவாக, குடும்பமாகக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்.



## பணித்தளங்களில் கட்டப்பட்டுவரும் கிராம ஆலயங்களில் ஒரு சில







## 2015 ஆம் வருடத்தில் 100 கிராம ஆலயங்களைக் கட்டி எழுப்ப

- ✞ ரூ. 2 இலட்சங்கள் — நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 100 பேர்கள் (அல்லது)
- ✞ ரூ. 1 இலட்சம் — நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 200 பேர்கள் (அல்லது)
- ✞ ரூ. 50,000 — நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 400 பேர்கள் (அல்லது)
- ✞ ரூ. 20,000 — நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 1000 பேர்கள் (அல்லது)
- ✞ ரூ. 10,000 — நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 2000 பேர்கள் (அல்லது)
- ✞ தங்களால் முடிந்த காணிக்கைகளைக் கொடுத்து இந்த தேவத் திட்டத்தை நிறைவேற்றும் ஆதரவாளர்களை தேவன் எழுப்பித் தரும்படியாக ஜெபிப்பதோடு நீங்களும் பங்குப் பெற்று தேவாசீர்வாதம் பெறுங்கள்.

- ☞ உங்கள் சபையில் சிறப்புக் காணிக்கைக் கொடுப்பவர்களை எழுப்பி சபை மூலமாக ஆலயங்களைக் கட்ட முன்வாருங்கள்.
- ☞ உங்கள் குடும்பத்தின் சார்பிலோ அல்லது உங்களது உறவினர்கள் நண்பர்களுக்கு இந்த ஊழியத்தினை அறிமுகம் செய்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.

**ரூ. 3 இலட்சங்கள் மற்றும் ரூ. 2 இலட்சங்கள் கொடுக்கக்கூடிய ஆதரவாளர்களுக்கு தனி கிராம ஆலயம் கொடுக்கப்பட்டு, ஆலய பிரதிஷ்டை DVD மற்றும் புகைப்படங்கள், அறிக்கை ஆகியன அனுப்பி வைக்கப்படும். மற்றநிதியாளர்களுக்கு இணைந்து கட்டப்பட்ட ஆலயத்தின் படங்கள், DVD மற்றும் அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படும்.**

**நிதி உதவி அனுப்பும் போது *Sharing Love Mission* என்றபெயருக்கு (Tuticorin Branch) D.D. or Cheque எடுத்து 100 கிராம ஆலய கட்டுமானப் பணிக்கான சிறப்பு நிதி என்று குறிப்பிட்டு அனுப்பி வைக்கலாம். மேலும் எங்கள் அலுவலகம், முன்னேற்றப் பணியாளர்கள், பிரதிநிதிகளிடம் கொடுத்து ரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | SHARING LOVE MISSION (Tuticorin Branch) |
| TMB வங்கிக் கணக்கு எண் | : | 106100710400009 (I F S Code : TMBL0000106) |
| Axis வங்கிக் கணக்கு எண் | : | 105010100094373 (IFS Code : UTIB0000105) |
| ICICI வங்கிக் கணக்கு எண் | : | 613901112799 (IFS Code : ICIC0006139) |

# சிறுவர்
# வேதாகம வகுப்பு–2015
# CBC (VBS)

பிரியமானவர்களே, நமது ஷாலோம் கிராம சபைகளிலுள்ள பீல் ஆதிவாசி சிறுவர்களைத் தேவன் மிகவும் நேசித்து, தமது கிருபையால் ஆசீர்வதித்து, அவர்களை ஞானத்தினால் நிரப்பி கல்வி அறிவைத் தந்து வருவதால், அவர்கள் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு வேத அறிவிலும் வளர்ந்து வருகின்றனர். இந்தச் சிறுவர்களை ஸ்திரப்படுத்தும்படியாக ஒவ்வொரு ஞாயிறு தோறும் நமது ஷாலோம் திருச்சபைகளில் ஞாயிறு வேதப் பள்ளிகளும், சிறுவர் மற்றும் வாலிபர்களுக்கான சிறப்பு முகாம்கள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி விடுமுறை நாட்களாகிய மே மாதத்தில் சிறுவர் வேதாகமப் பள்ளி (CBC - Children Bible Class) நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பள்ளிகளில் ஆயிரமாயிரம் சிறுவர்கள் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்று வருகின்றனர். கடந்த 2014 ஆம் ஆண்டில் "ஜெபமே ஜெயம்" என்ற தலைப்பில் 30000 க்கும் அதிகமான சிறுவர்கள் CBC வகுப்புகளில் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். இதற்கான தேவைகளை சந்தித்து வரும் பங்காளர்களாகிய உங்கள் யாவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

அதே போல் இந்த ஆண்டும் "நிலைத்திரு" என்ற தலைப்பில் 600 கிராமங்களில் 35000 க்கும் அதிகமான சிறுவர்களுக்கு CBC நடத்த ஜெபத்துடன் ஆயத்தப்பட்டு வருகிறோம். இதற்கான தேவைகள் 600 ஆசிரியர்களுக்கானப் பயிற்சிக் கையேடுகள், 35000 CBC புத்தகங்கள், Badge. (35,000), பாட்டுப் புத்தகங்கள் (15,000), கலர் பென்சில்கள், ஸ்கெட்ச் பேனாக்கள் (5000 Sets), CBC புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்ற பொருட்கள் கொடுக்கவும் ஒரு குழந்தைக்கு தலா ரூ. 20/– வீதம் 35000 மாணவர்களுக்கு ரூ. 7 இலட்சங்கள் தேவைப்படுகிறது. இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

மேலும் உங்கள் குடும்பத்தின் மற்றும் ஊழியத்தின் சார்பில் அல்லது சபையின் சார்பிலோ ஒரு மாணவருக்கு ரூ. 20/– வீதம் உங்களால் முடிந்த அளவிலான மாணவர்களுக்குக் கொடுத்து இந்தச் சிறுவர் ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்.

தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!



கடந்த ஆண்டின் CBC பயிற்சிப் புத்தகங்கள்

...மிகவும் சிறியவராகிய
என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு
நீங்கள் எதைச் செய்தீர்களோ,
அதை எனக்கே செய்தீர்கள்....
– (இயேசு) மத்தேயு 25:40

## பெண்கள் ஒரு நாள் தியானக் கூட்டம்

### 24.01.2015 - அபிஷேக நாதர் ஆலயம், மதுரை


தேவ செய்தியளிக்கும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்


கூடியிருந்த சபையின் பெண்கள்

## ஞாயிறு ஆராதனை - பவர் I.P.C. சபை - 01.2.2015, தூத்துக்குடி


தேவ செய்தியளிக்கும் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்


கூடியிருந்த சபையின் விசுவாசிகள்

## சகோ. ராஜன் ஆபிரகாம் (கொடைக்கானல்) அவர்களின் பணித்தள வருகை


கலாச்சார வரவேற்பு


தேவ செய்தியளிக்கும் சகோ ராஜன் அவர்கள் - அந்தர்வேலியா (ம.பி) கிராம ஆலயம்


தேவ செய்தியளிக்கும் சகோதரி. அனி ராஜன் அவர்கள் - சிக்லி (குஜராத்) கிராம ஆலயம்


பேராயர். தேவதாஸ் அவர்கள் குடும்பத்துடன்

# சகோ. சுகிர்தராஜ் (பாளையங்கோட்டை) அவர்களின் பணித்தள வருகை


கலாச்சார வரவேற்பு


பாடல் மற்றும் ஆராதனை வேளை


பகிர்வு வேளை – சகோ. சுகிர்தராஜ் (அந்தர்வேலியா, ம.பி)


அந்தர்வேலியா கிராம சபையில் கூடியிருந்த தேவ ஜனங்கள்


தெமோரா, (ம.பி.) கிராம ஆலய ஆராதனையில்


நகடியா (ம.பி.) கிராம ஆலயத்திற்கு முன்பு


மேந்திகேடா (ம.பி.) கிராம ஆலயத்திற்கு முன்பாக


தேவ செய்தியளிக்கும் சகோ. சுகிர்தராஜ் அவர்கள் (பாட்டன்புரா (குஜராத்)


மாண்ட்லி (ம.பி) கிராம ஆலயத்தில்

சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் தூத்துக்குடியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் குஜராத் மாநிலத்திலுள்ள பீல் இன ஆதிவாசி மக்களில் ஒருவர் சாட்சி பகிர்ந்ததைக் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்த மக்களை சந்திக்க வேண்டுமென வாஞ்சை அப்போதே எழுந்தது. பல்வேறு காரணங்களால் உடனே செல்ல இயலவில்லை. தேவனுடைய பெரிதான கிருபையினால் 2015ம் ஆண்டு ஜனவரி 11, 12 மற்றும் 13 தினங்களில் பீல் இன மக்கள் வாழும் பகுதிக்கு சென்று அவர்கள் மத்தியில் நடைபெறும் ஷாலோம் ஊழியம் குறித்து அறிந்து வர வாய்ப்பு கிட்டியது.

11–01–15 அன்று காலை தெமாரா கிராம ஆலயத்தில் சிறுவர்கள் மத்தியில் நடைபெற்ற ஊழியத்தைப் பார்த்தேன். சிறுவர்கள் ஆவிக்குரிய பாடல்கள் பாடி தேவனை ஆராதித்தது எங்களைப் பரவசப்படுத்தியது. அடுத்து மாண்ட்லி கிராம ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனையில் கலந்துக் கொண்டு விசுவாசிகளை உற்சாகப்படுத்த ஆண்டவர் உதவி செய்தார். பின்னர் மத்தியப்பிரதேசத்தில் ஷாலோம் ஊழியத்தின் மூலம் முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட அந்தர்வேலியா கிராம ஆலயத்தில் ஞாயிறு ஆராதனையில் **பேராயர். தேவதாஸ்** அவர்களோடு கலந்துக் கொள்ள வாய்ப்பு கிடைத்தது. 400க்கும் மேற்பட்ட ஆதிவாசி மக்கள் ஆடிப்பாடி தேவனை ஆராதித்து மகிமைப்படுத்தினார்கள். இங்கு பாடல் துதி ஆராதனையை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் நடத்த பேராயர் அவர்கள் தேவசெய்தி அளித்தார்கள். நானும் மக்களுடன் பேசி அவர்களை உற்சாகப்படுத்த தேவன் உதவி செய்தார். இங்கு சுமார் 300 ஆதிவாசி சிறுவர்களை Compassion International மூலமாகப் பொறுப்பெடுத்து அவர்களுடைய முன்னேற்றத்திற்காகவும், வளமையான எதிர்காலத்திற்காகவும், உழைப்பதை அறிந்து தேவனை துதித்தேன். தொடர்ந்து நெஹேடியா மற்றும் மேந்திகேடா கிராம ஆலயங்களை பார்வையிட்டு போதகர்களுடன் பேசி ஜெபித்து ஷாலோம் பணித்தள அலுவலகம் திரும்பினோம். அன்று முழுவதும் என்னுடன் இருந்து பணித்தளங்களை பார்வையிட **சகோ. சாமுவேல்** அவர்கள் உதவி செய்தார்.

12–01–15 அன்று ஷாலோம் ஊழியத்திற்கு முதல் முதலாகக் கொடுத்த ஹிரோலா கிராம ஆலயத்தையும் அங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கும் Child Development Centre ஐயும் பார்வையிட தேவன் உதவி செய்தார். இதன் மூலம் 282 சிறுவர்கள் பயன் பெறுகின்றனர். படிப்பறிவில்லாத இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர் படிப்பதற்காக வெளியூருக்கு வாகனத்தில் சென்று படிப்பதற்கு அவர்களுக்கு தேவன் உதவி செய்துள்ளதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். அங்கு ஊழியம் செய்துவரும் ஊழியர்களிடம் பேசி உற்சாகப்படுத்திய பின்பு ஜாலோத் பணித்தள அலுவலகத்தைப் பார்வையிட தேவன் அருள்புரிந்தார். இங்கிருந்து இராஜஸ்தான் மாநில கோய்க்கா கிராம ஆலயத்திற்குச் சென்றோம். இங்கு மிகுந்த பொருட்செலவில் அழகிய ஆலயம் கட்டப்பட்டு 100க்கும் அதிகமான சபை ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கும் மையமாக எழுப்பித் தந்துள்ளார் என்பதை அறிந்துக் கொண்டேன்.

தொடர்ந்து இராஜஸ்தானில் ஷாலோம் ஊழியம் மூலமாக எழுப்பப்பட்ட கும்புரா கிராம ஆலயத்தைப் பார்வையிட்டோம். பின்னர் பிஜல்பூர் கிராமத்தில் செயல்பட்டு வரும் உண்டு உறைவிட பள்ளியை பார்வையிடவும், அங்குள்ள மாணவ, மாணவியர்க்கு ஆலோசனைகள் வழங்கி உற்சாகப்படுத்தவும் தேவன் உதவி செய்தார். 300க்கும் அதிகமான ஆதிவாசி சிறுவர்கள் படிக்கும் இந்தப் பள்ளிக்கு தேவையான அடிப்படை கட்டிட வசதிகள் விரைவில் ஏற்படுத்தித் தருவது நமது கடமை என்பதை உணர்ந்து ஜெபித்தேன். இந்தப் பள்ளியை மேம்படுத்தினால் அநேக வருங்கால தலைவர்களையும் ஊழியர்களையும் உருவாக்கலாம் என்பது திண்ணம். தொடர்ந்து பேடர்நாத் கிராம ஆலய ஆராதனையில் கலந்துக் கொண்டு மக்களை உற்சாகப்படுத்த தேவன் உதவி செய்தார். இந்நாளில் **சகோ. டேனியலும், சகோ. கேரட்டும்** பணித்தளங்களைப் பார்வையிட உதவி செய்தனர்.

13–01–15 அன்று பணித்தள அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தேவசெய்தி வழங்கி ஜெபிக்க ஆண்டவர் உதவி செய்தார். தொடர்ந்து **சகோ. சாமுவேல்** அவர்களுடன் குஜராத் மாநிலம் நகரேலா வரம்கேடா 1, வரம்கேடா 2 கங்கேளா ஆகிய கிராம சபைகளை பார்வையிட தேவன் உதவி செய்தார். மேலும் பாட்டன்புரா கிராம ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு ஆராதனையில் கலந்துக் கொண்டு தேவ செய்தி அளித்து உற்சாகப்படுத்த தேவன் கிருபை செய்தார்.

கடந்த காலங்களில் ஷாலோம் ஊழியர்கள் பல இடர்பாடுகளுக்கு மத்தியில் பணி செய்தது, கொள்ளைக்காரர்களையும், குடிகாரர்களையும், மந்திரவாதிகளையும் ஜீவனுள்ள தேவனண்டை வழிநடத்தியது, பயபக்தியோடு தேவனை ஆராதித்தது அவர்களது வாழ்க்கை முறையை மறுரூபமாக்கியது மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இந்த பீல் இன மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியர்களுக்காகவும் நாம் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும்; பள்ளிக் கட்டிடங்கள் கட்டத் தேவையான உதவிகள் செய்வது நமது கடமை என உணர்ந்தேன். ***தேவனுக்கு மகிமை உண்டாவதாக!***

## *ஷாலோம் ஜெபக்குழு*

**பிரியமானவர்களே,** கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நமது ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்கும் அநேக ஜெபக் குழுக்களை தேவன் தந்துள்ளார். இந்த ஜெபக்குழுக்கள் சிறப்பாக செயல்பட்டுவருகின்றமைக்காக தேவனைத் துதிக்கிறோம்.

இதை வாசிக்கின்ற உங்களையும் மாதம் ஒரு முறை கூடி **ஷாலோம் ஊழியங்களுக்காகவும், இந்தியத் தேசத்திற்காகவும்** ஜெபிக்கும்படியாக தேவன் ஏவுவாராகில் உங்கள் பகுதியில் ஒரு ஜெபக்குழுவை ஆரம்பித்து ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்பி வைக்கிறோம். தேவன்தாமே ஜெபத்தின் மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக! தொடர்புக்கு : 9698044522, 0461 – 2375468, 2377737

## சகோ. ராஜன் ஆபிரகாம் (கொடைக்கானல்) அவர்களின் பணித்தள வருகை அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையால் நானும் **(Pr. ராஜன் ஆபிரகாம்)** எனது மனைவி **அன்னியும்** பெப்ரவரி மாதம் 1 முதல் 5ம் தேதி வரை ஷாலோம் மிஷெனரி பணித்தளங்களைப் பார்வையிட தேவன் கிருபை செய்தார். 1ம் தேதி குஜராத்திலுள்ள ஜெரி கிராமத்தில் நடைபெறும் Compassion Project-ஐ பார்வையிட்டோம். தொடர்ந்து கங்கேலா கிராமத்தில் உள்ள கூட்டத்தில் தேவவார்த்தையை பகிர்ந்துக் கொள்ள தேவன் கிருபை செய்தார். அதனைத் தொடர்ந்து கர்பாடா தாலுகாவில் உள்ள பாட்டன்புரா கிராம ஆலயத்தைப் பார்வையிட்டு ஊழியர் குடும்பத்தைச் சந்தித்து ஜெபித்தோம்.

2ம் தேதி இராஜஸ்தானிலுள்ள பாட்லா (நவப்பாடா) என்ற கிராமத்தில் ஒழுங்கு பண்ணப்பட்டிருந்த ஒரு விசேஷக் கூடுகையில் கலந்துக் கொண்டு நான் தேவசெய்தி அளிக்க, அதனை **சகோ. காரட்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். ஜெபவேளையில் அநேகர் அற்புத சுகத்தையும், விடுதலையையும் பெற்றார்கள்.

3ம் தேதி குஜராத்தில் ஹிரோலா கிராமத்தில் நடைபெறும் Compassion Project- ஐ பார்வையிட்டு தொடர்ந்து இராஜஸ்தானிலுள்ள கும்புரா கிராம ஆலயத்தையும் பார்வையிட்டு, பிஜல்பூரில் உள்ள ஷாலோம் மிஷன் பள்ளியையும், அங்குள்ள மாணவர்களையும் சந்தித்து ஜெபித்தோம். இராஜஸ்தானிலுள்ள ஊழியர்களுக்கான கூட்டத்தில் கலந்துக் கொண்டு தேவ வார்த்தையைப் பகிர்ந்துக் கொண்டோம். 4ம் தேதி மத்தியப்பிரதேசத்தில் உள்ள அந்தர்வேலியா, மேந்திக்கேடா, நெகடியா, டிக்கிடி போன்ற இடங்களைப் பார்வையிட்டு பாடல்வாவில் சிறப்புக் கூட்டத்தில் கலந்துக் கொண்டோம். 5ம் தேதி குஜராத்தில் சிக்கிலி (சோட்டா உதய்பூர்) பகுதியில் சிறப்புக் கூட்டத்தில் பங்கு பெற்று தேவனை மகிமைப்படுத்தினோம்.

இந்த ஐந்து நாட்களும் எங்களால் தேவனுடைய வல்லமையையும், அற்புதங்களையும் கண்கூடாக காணமுடிந்தது. இந்த நாட்கள் எங்களால் மறக்க முடியாதவைகள். **பேராயர். தேவதாஸ் அவர்கள்** குடும்பத்தோடு நாங்கள் செலவழித்த நாட்கள் எங்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. அவர்கள் அதிக கரிசனையோடு எங்களுக்குச் செய்த உபசரனைகள் அனைத்தையும் அனுபவித்து மகிழ்ந்தோம். பல உபத்திரவங்களின் மத்தியில் தேவன் அவர்கள் மூலம் செய்துவரும் சபைகள் ஸ்தாபிக்கும் பணி, பள்ளிக்கூடங்களை உருவாக்கும் பணி, மருத்துவமனைகள், வேதாகமப் பயிற்சி நிலையங்களை உருவாக்கும் பணிகள் அனைத்தையும் நேரில் பார்வையிடுவதற்கு தேவன் கிருபை செய்தார்.

எங்களுக்கென்று விசேஷமாக காலை தியானக் கூட்டம், ஊழியர்கள் கூட்டம், பள்ளி மாணவர்களுக்கான கூடுகைகள், சபைகளில் சிறப்புக் கூட்டங்கள் அனைத்தையும் ஏற்படுத்தி தந்தமைக்காகத் தேவனைத் துதிக்கிறோம். ஷாலோம் பணித்தளங்களில் கர்த்தருடைய வசனம் மற்றும் அற்புதங்கள் அடையாளங்கள் மூலம் கர்த்தர் வல்லமையாக செயல்படுவதைப் பார்த்து நாங்கள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டோம். மேலும் தேவன் **பேராயர் தேவதாஸ்** அவர்கள் குடும்பத்திற்குத் தந்த பெரிய ஆச்சரியமான தெய்வ தரிசனத்தை தேவன் விரைவில் நிறைவேற்றுவாராக.

**Pr. ராஜன் ஆபிரகாம் – சகோதரி. அன்னி,** கொடைக்கானல்



# இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே - லூக்கா 7 : 47

லெந்து காலச் செய்தி : **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்**

பெத்தானியா என்பது எருசலேம் அருகிலுள்ள சிறிய கிராமம். அதில் இயேசுவுக்கு பிரியமான குடும்பம் ஒன்று உண்டு. அந்தக் கிராமத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் இயேசு ஒரு பெண்ணைப் பார்த்து இவ்வாறு கூறி அவளை இதயப் பூர்வமாக பாராட்டினார். இந்த வார்த்தைகளால் மட்டுமல்ல, என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள் (மத்தேயு 26:10) என்றும் இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் (மாற்கு 14:8) என்றும் மனதாரப் பாராட்டினார். அந்த நிகழ்வை இப்போது தியானம் செய்வோம்.

பெத்தானியா என்ற கிராமத்தைச் சேர்ந்தவன் பரிசேயனாகிய சீமோன். இவன் இயேசுவால் தன் குஷ்டரோகத்திலிருந்து அற்புத சுகம் பெற்றான். தன் நன்றியை வெளிப்படுத்த இயேசுவை தன் வீட்டிற்கு அழைத்து நல்லதொரு விருந்து செய்ய எண்ணி அன்புடன் இயேசுவை அழைத்தான். இயேசுவும் அவன் அழைப்பை ஏற்று அவனுடைய வீட்டிற்குச் சென்றார். இதைக் கேள்விப்பட்ட ஒரு ஸ்திரீயும் தன் பாவத்தை இயேசு மன்னித்து விடுதலை தந்ததை நினைத்து நன்றி செலுத்த அந்த வீட்டுக்குச் சென்றாள்.

ஒரு பரிசேயன் மோசேயின் பிரமாணங்களைச் சரியாக கடைபிடிக்கிறவன் இயேசுவை வரவேற்க தன் வீட்டின் வாசலுக்கு வந்தான். அப்பொழுது அவன் கண்கள் இயேசுவை மட்டும் பார்க்கவில்லை. அவருக்குப் பின்னே வருகிற பாவமுள்ள ஸ்திரீயாகிய மரியாளையும் பார்த்து விட்டன. அந்த நிமிஷ நேரத்திலிருந்து இயேசுவைக் கவனிக்க வேண்டிய அவன் எண்ணம் முற்றிலும் சிதறினது. பரிசேயன் தன் யூத முறைமையின்படி தன் வீட்டிற்கு விருந்துக்குவரும் இயேசுவின் கால்களை கழுவ தண்ணீர் கொடுக்க வேண்டும். அவர் பாதத்தைத் துடைக்கவேண்டும். வீட்டிற்குள்ளே வந்தவுடன் சிரசிலே எண்ணை வார்த்து அபிஷேகம் செய்ய வேண்டும், அணைத்து முத்தம் செய்ய வேண்டும். ஆனால் அவன் அப்படி ஒன்றும் செய்யவில்லை.

மரியாளைப் பார்த்துவிட்ட சீமோன் இயேசுவுக்கு ஒன்றும் செய்யாமல் அதிர்ச்சியில் நிற்கும்போது இயேசு அவன் உள்ளத்தின் சிந்தனையை உணர்ந்து சீமோனே இருவர் ஒருவனிடத்தில் கடன்பட்டிருந்தார்கள். ஒருவன் 500 வெள்ளிகாசும், இன்னொருவன் 50 வெள்ளிக்காசும் கடன்பட்டிருந்தான். கடன் கொடுத்தவன் இருவரின் கடனையும் மன்னித்துவிட்டான். அந்த இருவரில் எவன் அவனிடத்தில் அன்பாயிருப்பான் என்று கேட்டார். சீமோன் உடனே அதிக கடன் மன்னிக்கப் பெற்றவனே என்று கூறினார். இயேசு அவனைப் பார்த்து, சரியாய் நிதானித்தாய் என்று சொல்லி மரியாளுக்கு அவள் பாவங்கள் எல்லாம் மன்னித்து விட்டதையும், அதினால் அவள் அதிகமாக என்னிடத்தில் அன்புகூர்ந்தாள். சீமோன் தன் சரீரத்தில் மாத்திரம் குஷ்டரோகம் நீங்கி சுகம் பெற்றிருந்தான். மரியாளோ சரீரத்திலும் ஆத்துமாவிலும் குணம் பெற்று இயேசு கிறிஸ்துவை நூற்றுக்கு நூறு நேசித்தாள். அது அவளை இயேசுவுக்கு தன்னலமற்ற சேவை செய்ய முந்தச் செய்தது. மேலும் இயேசு சீமோன் வீட்டிற்கு

வந்தபோதோ அவன் அவருக்கு செய்யவேண்டிய யாவையும் செய்யாமற்போனான். ஆனால் மரியாளோ தண்ணீருக்குப் பதிலாக தன் கண்ணீரினால் பாதத்தை நனைத்து, தன் தலை மயிரினால் துடைத்து இயேசுவின் பாதங்களில் பரிமளதைலத்தை பூசி ஓயாமல் அவர் பாதத்தை முத்தம் செய்தாள். ஆகையால் இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது. **"இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே"** என்று இயேசு கூறினார். இயேசு பரிசேயனாகிய சீமோனிடத்தில் எதிர்பார்த்ததை மரியாளிடம் பெற்றுக்கொண்டார்.

பரிசேயனாகிய சீமோன் மரியாளைப் பார்த்து பாவி என தீர்ப்பு செய்து, அருகில் வந்த இயேசுவை கவனியாமல் விட்டுவிட்டான். பரிசேயனுடைய இயற்கை குணம் மற்றவர்களை குற்றவாளியாக தீர்ப்பதுதான். வாசித்து பாருங்கள் ரோமர் 2:1, மத்தேயு 7:1,2 நாமும் மற்றவர்களை மனதில் நியாயம் தீர்ப்பதை விடுத்து இயேசுவை நோக்கிப் பார்ப்போம். இயேசுவை கனப்படுத்தும் சந்தர்ப்பத்தை நழுவவிடாமற் பார்த்துக் கொள்வோம். சீமோன் மரியாளை மாத்திரம் தன் இதயத்தில் குற்றப்படுத்தவில்லை. இயேசுவையே குற்றப்படுத்தினான். இவர் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தால் மரியாள் ஒரு மகாபாவி என்று அறியாமல் இருப்பாரோ என்றான். மரியாள் இயேசுவிடம் வைத்திருந்த அன்பை எப்படி வெளிப்படுத்தினாள். பரிசேயர்கள், சீஷர்கள் விமர்சகர்கள் நிறைந்த கூட்டத்தில் அவள் இயேசுவிடம் வைத்திருந்த அன்பை வெளிப்படுத்த வெட்கப்படவும், பயப்படவும் இல்லை. அவளது முழு பார்வையும் அந்த கூட்டத்தில் இயேசுவை மாத்திரம் பார்த்தது. விமர்சன வார்த்தைகளைக் குறித்து வெட்கமோ, கவலையோ படவில்லை நாமும் எந்த சூழ்நிலையிலும் இயேசுவை உறுதியாய் பின்பற்றுவோம், அவரைக் கனப்படுத்துவோம்.

இயேசுவுக்கு மரியாள் கொடுத்தது வெள்ளைக்கல் பரணியிலுள்ள தைலம். இது களங்கமில்லாதது, உத்தமமானது, விலை உயர்ந்தது, முதன்மையானது, பழுதற்றது. நளதம் என்ற தைலம். நளதம் என்பது நள + தம் என்று பிரித்து பொருள் கொள்ளலாம். நள என்றால் 50ஐக் குறிக்கும், தம் என்றால் இரவு அல்லது வாசனை என்று பொருள். 50விதமான வாசனைத் திரவியத்தை அதிக விலை கொடுத்து பல தேசங்களிலிருந்து வரவழைத்து 50 இரவுகள் ஒன்றாக கலந்த கலவையாக பத்திரப்படுத்தி, அது சிறந்த வாசனைத் திரவியமாக மாறிய பின் மரியாள் அதை இயேசுவுக்குக் கொண்டு வந்தாள். அதைக் கொடுத்தது தன்னையே கொடுத்ததற்கு சமம்.

மரியாள் தன்னையே உடைத்து இயேசுவின் பொற்பாதத்தில் ஊற்றிவிட்டபடியால் தான் இயேசு அவளைப் பார்த்து "இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே" என்று சொன்னார். அதுமட்டுமல்ல "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது". "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடே போ" என்றும் கூறினார். இயேசுவை விருந்துக்கு அழைத்த சீமோன் பெறவேண்டிய அத்தனை ஆசீர்வாதங்களையும் மரியாள் இயேசுவிடமிருந்து பெற்றுக்கொண்டாள். மரியாளைப் போல நாமும் களங்கமில்லாது இயேசுவிடம் அன்பு கூர்ந்திடுவோமாக. இயேசுவுக்கு நம்மில் உள்ள முதன்மையானவற்றை கொடுத்து அவரை மகிழப்பண்ணுவோமாக.

எங்கே இந்தப் பாடலை என்னோடு சேர்ந்து பாடுங்கள்

**"அன்புகூருவேன் இன்னும் அதிகமாய்**
**முழு உள்ளதோடு ஆராதிப்பேன்**
**ஆராதிப்பேன் இன்னும் ஆர்வமாய்**
**முழு பெலத்தோடு அன்பு கூறுவேன்"**

# பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

## குஜராத் மாநிலம்

**Pr. சாம்ஜி மெய்டா — ஜெரி கோர்டு**

ரமேஷ் என்ற சகோதரன் 2 வருடங்களாக இடுப்பு வலியினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். எவ்வளவோ மருத்துவம் பார்த்தும் பலனில்லை. இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக சுகத்தைக் கொடுத்தார்

**Pr. மான்சிங் வகோனியா — நந்தேலாவ்**

நரேஷ் என்ற சகோதரனின் வயிற்றில் கட்டி இருந்தது. எவ்வளவோ மருத்துவம் செய்தும் குணமாகவில்லை. இறுதியாக விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் அற்புதமாக கட்டியை மறையச் செய்தார்.

**Pr. சாவ்சிங் டாமோர் — கர்வாணி**

முகேஷ் என்ற சகோதரி ஒரு வருடமாக அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டு, மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். இவரை ஜெபிக்கும்படியாக நமது ஷாலோம் சபைக்குக் கொண்டு வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது ஜெபத்தைக் கேட்டு தேவன் அற்புத விடுலைக் கொடுத்தார்.

**Pr. கமலேஷ் சங்கடா — போர்பானி**

மகன்பாய் என்ற சகோதரனின் மகன் 3 வருடமாக நடக்க முடியாமல் பாதிக்கப்பட்டிருந்தார். அநேக மருத்துவம், மந்திரம் செய்தும் பலனில்லாமல், ஜெபிக்கும்படியாக ஆலயத்திற்கு வந்தார்கள். அவர்களுக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்து நடக்கச் செய்தார்.

**Pr. சாம்சன் டாமோர் — வாங்கோல்**

மேசரி என்ற சகோதரியை பாம்பு கடித்துவிட்டது. உடனே நமது ஷாலோம் ஆலயத்திற்கு அழைத்து வந்தார்கள். உடனே சபையார் அனைவரும் சேர்ந்து ஜெபித்தபோது, தேவன் தாமே விஷம் ஏறாமல் தடுத்து ஜீவனைக் காத்தார்.

## மத்தியப்பிரதேசம் மாநிலம்

**Pr. அமர்சிங் வாசுனியா — கதியாதலை**

புஜியா என்ற 35 வயதான சகோதரன், குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்ததினால், மன நிலை சரியில்லாமல் காணப்பட்டார். ஜெபக் கூட்டத்தில் கலந்துக் கொண்டு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. தும்லா காட் — வால்பூர்**

காளி என்ற சகோதரிக்கு திருமணமாகி 5 வருடங்களாகியும் குழந்தை இல்லை. மருத்துவத்திற்கு சுமார் 50,000/– செலவு செய்தும் எந்த பலனுமில்லை. இறுதியாக இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டு ஜெபிக்கும்படியாக ஆலயத்திற்கு வந்தார்கள். அவருக்காக ஜெபித்தபோது தேவன் குழந்தை பாக்கியத்தைக் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார்.

**Pr. தோலு மெய்டா — வால்பூர்**

கேசா என்ற சகோதரி 5 வருடமாக பிசாசின் பிடியில் சிக்கி மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் விடுதலைக் கொடுத்தார்.

**Pr. தும்சிங் புரியா — மங்கா**

சோபனா என்ற சகோதரியை பாம்பு கடித்துவிட்டது. இவருக்காக ஜெபித்தபோது தேவன் ஜீவனைப் பாதுகாத்தார்.

பிசாசின் பிடியில் சிக்கியிருந்த பிராகாஷ் என்ற சகோதரனுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் அற்புத விடுதலையைக் கொடுத்தார்.

**Pr. சர்தார் டாமோர் காளாகேத்**

ராமுடி என்ற சகோதரிக்கு வயிற்றில் கட்டி இருந்தது. இதற்காக அநேக மருத்துவம் செய்தும் பலனில்லாமல் ஜெபிக்கும்படியாக வந்தார். அவருக்காக ஜெபித்தபோது தேவன் கட்டியை மறையச் செய்து சுகத்தைக் கொடுத்தார்.

## இராஜஸ்தான் மாநிலம்

**Pr. தாவுரா மெய்டா கக்கன்வானி**

காளியா என்பவரின் சரீரத்தில் கட்டி இருந்தது. மருத்துவமனைக்கு சென்றும் எந்த பலனுமில்லை. இறுதியாக ஆராதனையில் கலந்துக் கொண்டு ஜெபித்தபோது தேவன் கட்டியை மறையச் செய்தார்.

வால்சிங் என்ற சகோதரன் 6 மாத காலமாக வியாதிப்பட்டு, மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. தாஜு நக்வான் சாமகுடி**

யாக்கூப் என்ற சகோதரரின் மகன் மலேரியா காய்ச்சலினால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். அவனுக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

எலியா என்ற சிறுவன் மஞ்சள் காமாலை நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், அவனுக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. தார்சிங் கட்டாரா பாட்லா**

காளி என்ற சகோதரியின் கை மற்றும் கால்களில் எந்த பெலனுமில்லாமல் காணப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் நல்ல பெலனைக் கொடுத்தார்.

**Pr. வாக்ஜி நினாமா ஆம்ளிப்பாடா**

ஒரு சகோதரியை பாம்பு கடித்துவிட்டது, அவருக்காக ஜெபித்தபோது, தேவன் விஷம் ஏறாமல் தடுத்து, ஜீவனைக் கொடுத்தார்.

சுந்தரி என்ற சகோதரி கடந்த 5 ஆண்டுகளாக இருமலினால் பாதிக்கப்பட்டு எந்த வேலையும் செய்ய முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டார். ஜெபத்தின் மூலம் தேவன் நல்ல சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. வாகிங் முனியா முனியா கூட்டா**

ஜவ்ரா என்ற சகோதரர் சுவாசிக்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டார். ஜெபத்தின் மூலம் தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

கோர்சிங் என்ற சகோதரனின் வயிற்றில் வீக்கம் ஏற்பட்டு மிகவும் கஷ்டப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. தாஜு கராசியா கேத்தாடியா**

மல்ஜிபாய் என்ற சகோதரர் பிசாசின் பிடியினில் சிக்கி மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது, தேவன் பிசாசுகளை துரத்தி அற்புத விடுதலைக் கொடுத்தார்.

**Pr. வெல்ஜி கராசியா ஜீராகாட்**

ஆஷா என்ற சகோதரிக்கு ஏற்பட்ட தொடர் வாந்தியினால் மிகவும் கஷ்டப்பட்டார். ஜெபத்தின் மூலம் தேவன் நல்ல சுகத்தைக் கொடுத்தார்.

## பெண்கள் ஒரு நாள் தியானக் கூடுகை – 24.01.2015
## அபிஷேக நாதர் ஆலயம், மதுரை

தேவனுடைய பெரிதான கிருபையினால், 24.01.2015 அன்று மதுரை, அபிஷேக நாதர் ஆலயத்தில் நடைபெற்ற பெண்கள் ஒரு நாள் தியானக் கூட்டத்தில் நமது ஷாலோம் ஊழியத்திலிருந்து **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் காலை மற்றும் மாலை வேளைகளிலும் மற்றும் 25.01.2015 அன்று நடைபெற்ற ஞாயிறு ஆராதனையிலும் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். தேவன் சகோதரியை வல்லமையாக பயன்படுத்தினார். செய்தியின் மூலம் அநேக பெண்கள் தொடப்பட்டனர். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர். **Rev. தங்கராஜ்** அவர்களுக்காகவும், **சகோதரி. பெல்சியா விக்டர்** அவர்களுக்காகவும் சபை உறுப்பினர்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**பவர் IPC சபை, தூத்துக்குடி.**

தேவனுடைய பெரிதான கிருபையினால், 01.02.2015 அன்று தூத்துக்குடி, ஸ்டேட்பேங் காலனி, பவர் IPC சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியத்திலிருந்து **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டதோடு, தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். சகோதரியை அழைத்து தங்கள் சபையில் பயன்படுத்திய சபை போதகர் **Pr. ரூபன் சாமுவேல்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**இயேசு அழைக்கிறார் ஜெபக் கோபுரம், அஹமதாபத் கூட்டங்கள்.**

அஹமதாபாத், இயேசு அழைக்கிறார் ஜெபக்கோபுரத்தில் 07.02.2015 அன்று **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் ஆவியானவர் எங்கே உண்டோ அங்கே விடுதலை உண்டு என்ற தலைப்பில் தேவ செய்தியும், 07.02.2015 & 08.02.2015 இரண்டுநாள் மாலையிலும் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் குடும்ப ஆசீர்வாதத்தைக் குறித்த செய்தியும் வழங்கி ஜெபித்தார்கள். பங்கு பெற்ற அனைவரும் அற்புதமான விடுதலையையும், அபிசேஷத்தையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டார்கள். **தேவனுக்கே மகிமை உண்டாவதாக**

**Green City Bible Church Service, Ganthi Nagar**

08.02.2015 அன்று காந்தி நகர் Green City Bible Church –ல் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். செய்தியின் மூலம் அநேகர் தொடப்பட்டதோடு, ஷாலோம் ஊழியங்களைத் தாங்க முன்வந்தனர்.

**Immanuel Prayer House, Chennai**

தேவனுடைய பெரிதான கிருபையினால், 01.02.2015 அன்று சென்னை, Immanuel Prayer House இரண்டு சபைகளிலும் நடைபெற்ற ஞாயிறு ஆராதனைகளில் நமது ஷாலோம் **பேராயர். V. தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து

கொண்டார்கள். மேலும் இதுவரையில் இந்த ஊழியத்தின் சார்பில் ஷாலோம் சுதேச ஊழியர் 3 பேரை ஜெபித்துத் தாங்கி வந்தார்கள். 01.02.2015 முதல் 4 மிஷனெரியை ஜெபித்துத் தாங்க முன் வந்துள்ளார்கள். பிஷப் அவர்களை அழைத்து பயன்படுத்திய போதகர் **Pr. D. மோசஸ் ஜெபராஜ்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**குடும்ப உபவாசக் கூடுகை – 14.02.2015 – சென்னை**

14.02.2015 அன்று சென்னை பாடி பகுதியில் சுவிசேஷ தரிசன ஊழியத்தின் சார்பில் நடைபெற்ற குடும்ப உபவாசக் கூடுகையில் நமது ஷாலோம் **பேராயர். V. தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு, நமது ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டதோடு, எபிரெயர் 6 : 4 வசனத்திலிருந்து வாக்குத்தத்த செய்தியும் கொடுத்தார்கள். மேலும் ஷாலோம் ஊழியங்களைக் குறித்ததான வீடியோ படக் காட்சியும் ஒளிபரப்பப்பட்டது. இந்தக் கூடுகையை **சகோ. ராஜா** அவர்கள் ஒருங்கிணைத்து நடத்தினார்கள். அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

## Epworth Methodist Tamil Church

தேவனுடைய பெரிதான கிருபையினால், 15.02.2015 அன்று மும்பை, Epworth Methodist Tamil Church –ல் நடைபெற்ற Mission Sunday ஆராதனையில் நமது ஷாலோம் **பேராயர். V. தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு, நமது ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டதோடு, **“பவுல் கூறிய என்னை பின்பற்றுங்கள்”** என்ற வார்த்தையைக் குறித்து தேவ செய்தியளித்தார்கள். செய்தியின் மூலம் அநேகர் தொடப்பட்டனர். மேலும் இந்த ஆராதனையில் பெறப்பட்ட காணிக்கையான ரூ. 25,000/– ஐ ஷாலோம் ஊழியங்களுக்காக கொடுத்தார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் **Rev. N. முத்துக்குமார்** அவர்களுக்காகவும், சபையார் அனைவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

மேலும் 15.02.2015 அன்று மாலை மும்பையிலுள்ள **சகோ. ரஜீவன்லால்** அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற ஜெபக் கூட்டத்தில் ஷாலோம் **பேராயர். V. தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு, தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள்.

**தூய. பேட்ரிக் CSI ஆலயம்**

தேவனுடைய பெரிதான கிருபையினால், 08.02.2015 அன்று தூத்துக்குடி, CSI பேட்ரிக் ஆலயத்தில் நடைபெற்ற மிஷனெரி நிகழ்ச்சியில் நமது ஷாலோம் ஊழியத்தின் சார்பில் தூத்துக்குடி தலைமை அலுவலக அனைத்து சகோதர சகோதரிகளும் கலந்து கொண்டனர். இதில் பாடல் ஆராதனையை **சகோ. ரத்திஸ் குமார்** அவர்கள் ஏறெடுக்க, **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டதுடன், ஷாலோம் ஊழியங்களைக் குறித்த வீடியோவையும் காண்பித்தார்கள். அதன் பின் சகோதரிகளின் குறு நாடகம், பாடல் வேளைகள், அபிநயப் பாடல் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் மிஷனெரி பாரத்தினை ஏற்படுத்தியதுடன் தேவனை மகிமைப்படுத்தினார்கள். அதன்பின் **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள்.

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்



**இந்திய தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக**

இந்திய தேசத்தை தேவன் ஆசீர்வதிக்கும்படியாகவும், தேசத்தில் பல இடங்களில் நடக்கும் வன்முறைகள் எல்லாம் மாறும்படியாகவும், குறிப்பாக கிறிஸ்தவர்களுக்கும், ஊழியங்களுக்கும் விரோதமாக எழும்பும் நிலைமை மாறி கர்த்தருடைய நாமம் மகிமைப்படும் படியாகவும் ஜெபியுங்கள்.

**ஊழியங்களுக்காகவும், ஊழியர்களுக்காகவும்**

தேசத்தில் உள்ள அனைத்து மிஷனரி ஊழியங்களுக்காகவும், சுவிசேஷ ஊழியங்களுக்காகவும், சபை ஊழியங்களுக்காகவும், போதகர் ஊழியங்களுக்காகவும், தீர்க்கதரிசன ஊழியங்களுக்காகவும் இந்த ஊழியங்களையும், ஊழியர்களையும் தேவன் பாதுகாத்து தம்முடைய நாம மகிமைக்காக வல்லமையாகப் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

**பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக**

கர்த்தர் தரிசனமாகக் கொடுத்த குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள 1 கோடி பீல் ஆதிவாசி மக்களும் இயேசுவை அறிந்துக் கொண்டு அவரை ஏற்றுக் கொண்டு அங்குள்ள மந்திரவாதிகள், கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், பலவிதமான பாவ, சாபங்களிலும் உள்ள மக்கள் இரட்சிக்கப்பட்டு இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்று சாட்சியாக வாழவும் ஜெபியுங்கள்.

**சுதேச ஊழியர்கள்**

அபிஷேகம் பெற்ற 200 புதிய சுதேச ஊழியர்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் ஷாலோம் ஊழியத்தில் இணையவும் தேவன் அவர்களை வல்லமையாகப் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

**விஷ காய்ச்சல்**

நம் தேசத்தில் காணப்படுகின்ற விஷ காய்ச்சல் மற்றும் பலவிதமான நோய்கள் எல்லாம் மாறவும் மக்கள் நல்ல சுகத்தோடு தேவனை மகிமைப்படுத்தும் படியாகவும் ஜெபியுங்கள்.

**வடஇந்தியாவின் பாதுகாவலுக்காக**

வடஇந்தியாவில் உள்ள ஊழியங்களுக்காகவும், அங்குள்ள ஊழியர்களுக்காகவும் குறிப்பாக நம் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் எழும்பியுள்ள எதிர்ப்பாளர்களுக்காகவும், எந்த எதிர்ப்பு வந்தாலும் விசுவாசிகள் சோர்ந்து போகாமல் விசுவாசத்தில் முன்னேறவும், அதன் மூலம் கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படியாகவும் ஜெபியுங்கள்.

**சாலை விபத்துக்கள்**

தற்போது அதிகமான சாலை விபத்துக்கள் ஏற்படுகிறது நம்முடைய ஊழியர்கள், விசுவாசிகள், சிறு குழந்தைகள், வாலிபர்கள் அனைவருக்கும் தேவன் தாமே முன்னின்று சாலை விபத்துக்களிலிருந்து நம்மை பாதுகாக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

**தேர்வெழுதும் மாணவ மாணவிகளுக்காக**

நம் ஷாலோம் ஊழியத்தின் மூலம் தாங்கப்பட்டு வரும் சிறுவர்கள் மற்றும் நம் சுதேச ஊழியர்களுடைய பிள்ளைகள் 10 மற்றும் +2 தேர்வுக்கு ஆயத்தமாகியிருக்கிறார்கள். இந்தப் பிள்ளைகளுக்கு தேவன் நல்ல ஞானத்தையும், தேர்வு நேரங்களில் நல்ல சுகத்தையும் கர்த்தர் கொடுக்கும்படியாகவும், இந்தப் பிள்ளைகள் நல்ல மதிப்பெண்கள் பெற்று உயர்கல்வி பெற்று தேவ நாமம் மகிமைப்பட ஜெபியுங்கள்

**ஆலய கட்டுமான பணி**

2015ம் ஆண்டில் நம்முடைய பணித்தளத்தில் 100 ஆலயங்கள் கட்டப்படவும், ஒரு ஆலய கட்டுமானப் பணிக்கு ரூ. 2 இலட்சங்கள் தேவைப்படுகிறது. இந்த தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படவும், நம் பீல் மக்கள் ஆராதிப்பதற்கு ஆலயம் இல்லாமல் இருக்கிறார்கள், இந்த தேவைகளை சந்திப்பதற்கு புதிய ஆதரவாளர்கள் தேவை அதற்காகவும் ஜெபியுங்கள்.

**மூப்பர்கள் கூடுகை**

2015ம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் 25 இடங்களில் நடைபெறவுள்ள மூப்பர்கள் கூடுகைக்காகவும், இந்தக் கூடுகையில் சுமார் 5000 மூப்பர்கள் கலந்துக் கொள்வார்கள், இந்தக் கூடுகை சிறப்பாக நடைபெறவும், தேவன் மூப்பர்களை வல்லமையாகப் பயன்படுத்தும்படியாகவும் ஜெபியுங்கள்.

**திருச்சபை ஒருங்கிணைப்பு**

வளர்ந்து வரும் ஷாலோம் ஊழியத்தில் 3 மாநிலங்களிலும் உள்ள சபைகள், விசுவாசிகள், ஊழியர்கள் பெருகியுள்ளார்கள் மூன்று மாநிலங்களும் மூன்று திருமண்டலமாக பிரிக்கப்பட்டு இதில் ஊழியம் செய்கிற குருவானவர்கள் அனைவருக்கும் ஒரு மனமாய் செயல்பட கர்த்தருக்கென்று உண்மையோடு செயல்பட ஜெபியுங்கள்.

**40 நாட்கள் உபவாசம்**

இந்த லெந்து நாட்களில் பீல் விசுவாசிகள் அனைவரும் உபவாசம் இருந்து ஜெபிக்கவும், அவர்களை தேவன் பலப்படுத்தவும், இதன் மூலம் அவர்கள் ஜெபத்தைக் கேட்டு இயேசுவை ஏற்றுக் கொள்ளாத மற்ற பீல் மக்களும் இந்த உபவாச நாட்களில் இரட்சிப்பிற்குள்ளாக வரவும் ஊக்கமாக ஜெபியுங்கள்.

**ஷாலோம் பங்காளர்கள்**

மாதந்தோறும் புதிய ஆதரவாளர்கள் இணையவும், ஆதரவாளர்களுடைய குடும்பங்களுக்காகவும், அவர்களுடைய நோய்கள், கடன் பிரச்சனைகள், பிசாசின் கட்டுகள், மரணப்படுக்கைகள் மாறவும், குழந்தை இல்லாத குடும்பங்களில் தேவன் குழந்தை பாக்கியத்தைக் கொடுக்கவும், வேலை இல்லாத பிள்ளைகளுக்கு தேவன் தக்க சமயத்தில் வேலையைக் கொடுத்து ஆசீர்வதிக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

## ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE**

**M/S. SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

**CHENNAI BRANCH OFFICE**

**Bro. John Jeyasingh**
No.102-2nd Main Road
Sathya Nagar, Padi,
CHENNAI - 600050.
Cell : 9698244577

**MARTHANDAM BRANCH OFFICE**

**Bro. Selvadurai.G**
Bethel,
25-7/A 1-Block 25, Paruthivilai,
Kannakode, Marthandam - 629165
Cell : 9487689869

**MUMBAI BRANCH OFFICE**

**Bro. Prabhakaran. P.**
C/o. Mr. P.Immanuel,
C-2, Plot No.123-Old Mhada Colony,
Mangalya Co.Op.Society Ltd,
Pokharan Road No.2,
Thane West - 400610
Cell : 9768282699

**NAGERCOIL BRANCH OFFICE**

SHARING LOVE MISSION Branch
Ebenezer Plaza, Parama Street,
WCC Junction,
Nagercoil - 629001
Cell : 9698444522

**MADURAI BRANCH OFFICE**

**Bro. Chandra Paul. S**
6/3, Nellaiappar Puram 7th Street,
Tirunagar (p.o)
MADURAI-625006
Cell : 9698644522

**TIRUNELVELI BRANCH OFFICE**

**Bro. David. R**
56 A/4,-C.S.I Church South Street,
(Upstairs) STC road,
Perumalpuram, Palayamkottai
TIRUNELVELI-627007
Cell 9698844599

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும்**
**சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**

**174100710400061**
**Branch : Tiruchendur Road**
(IFS Code : TMBL0000174)

**AXIS BANK**

**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- காணிக்கைகளை **E.M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, **Net Transfer** மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலம் **Deposit** பண்ணலாம்.
- எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

---

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

AXIS BANK
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

ICICI Bank
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

---

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலமாகவோ அல்லது **Net Transfer** மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : 9698244522

புது டில்லி சட்டசபைத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி 67 தொகுதிகளில் பெரும்பான்மையாக வெற்றி பெற்றது. இந்தக் கட்சியின் ஒருங்கிணைப்பாளரான அர்விந்த் கெஜ்ரிவால் சுமார் 23 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். மேலும் புது டில்லி முதலமைச்சராக அர்விந்த் கெஜ்ரிவால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

---

சுமார் அரை நூற்றாண்டுக்கு முன் சிலி கால் பந்தாட்ட வீரர்கள் உட்பட 34 பேருடன் காணாமல் போன விமானம், மலையேறும் வீரர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சாண்டியோகாவில் இருந்து 300 கி.மீ. தொலைவில் உள்ள மௌலே பகுதியில் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவரை மாயமான விமானம் என்ற நிலையில் இருந்து, தற்போது முடிவுக்கு வந்துள்ளது. இந்த இடத்தில் விமானத்தின் ஏராளமான துண்டுகளும், அநேக மனித எலும்புகளும் சிதறிக் கிடந்தன.

---

பல உயிர்க் கொல்லி நோய்களினால் ஏராளமான மக்கள் உயிரிழந்து கொண்டிருக்கும் நிலையில் எளிய சோதனையின் மூலம் 15 நிமிடங்களில் உயிர்க்கொல்லி நோய் இருப்பதைக் கண்டுபிடிக்கும் புதிய கருவியை மருத்துவ விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். டாங்கிள் ஐ எனப்படும் மிகச்சிறிய வடிவிலான இந்தக் கருவியை ஸ்மார்ட் போன் அல்லது கணிணியில் இணைத்து அதன் மேல்புரத்தில் ஒருவரது கட்டை விரலை வைத்தால் அதிலிருந்து அந்த கருவி இரத்த மாதிரியை எடுத்து 15 நிமிடத்தில் அந்த நபருக்கு இருக்கும் உயிர்க்கொல்லி நோயை தெரிவித்துவிடும்.

---

தென் கிழக்கு ஆப்பிரிக்க நாடான மொசாம்பிக்கில் கடந்த சில வாரங்களாக ஏற்பட்ட மழை வெள்ளத்தில் 159 பேர் உயிரிழந்துள்ளனர். 1.58 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 2000 ஆம் ஆண்டில் இதே நாட்டில் ஏற்பட்ட மிக மோசமான மழை வெள்ளத்திற்கு 800க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்


தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468, 2377737
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 07043334501
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

ஷாலோம் கிராம ஆலயம்

# காக்கன்வானி

## இராஜஸ்தான்



காக்கன்வானி என்ற கிராமம் இராஜஸ்தானிலுள்ள பான்ஸ்வாடா மாவட்டத்திலுள்ள குசல்கட் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்திலுள்ள மக்கள் இயேசுவைப் பற்றி அறியாதவர்கள். சாராயம், பீடி, தம்பாக்கு விக்கிரக ஆராதனை போன்ற பாவங்களில் வாழ்பவர்கள். ஊழியர் தாவ்ரா மெய்டா அவர்கள் இயேசுவை அறியாததற்கு முன் பாவத்திலும், அந்தகாரத்திலும் வாழ்ந்து வந்தார். இவர் திடீரென்று பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு, 2 வருடங்கள் மிகவும் கஷ்டப்பட்டார். பின்பு இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டு, ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. தார்சிங் கட்டாராவிடம் ஜெபிக்கும்படியாகச் சென்றார். அங்கு ஊழியர் அவருக்காக பாரத்தோடு ஜெபித்தார். ஜெபத்தைக் கேட்டு தேவன் சகோ. தாவ்ரா மெய்டா அவர்களுக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அதன் மூலம் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்.

பின்பு தனக்கு சுகம் கொடுத்த தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டு மென்ற பாரம் ஏற்பட்டு தன்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்து, தனது சொந்த கிராமமாகிய காக்கன்வானியில் தனது வீட்டில் 4 பேருடன் கூட்டம் நடத்த ஆரம்பித்தார். ஆரம்பத்தில் கிராம மக்கள் எதிர்த்தனர். ஆனாலும் சோர்ந்து போகாமல் கூட்டம் நடத்தினார். ஒரு முறை சிக்குன்குனியா வியாதியினால் பாதிக்கப்பட்ட ஒரு சிறுவனை கூட்டத்திற்கு கொண்டு வந்தார்கள். தாவ்ரா பாய் ஜெபித்ததில் அந்த சிறுவன் பரிபூரண சுகம் பெற்றான். அந்த அற்புதத்தின் மூலம் அநேக புதிய ஆத்துமாக்கள் சபைக்கு வர ஆரம்பிக்கவே, சபை வளர ஆரம்பித்தது.

தற்போது 30க்கும் அதிகமான குடும்பத்தார் இயேசுவை ஏற்றுக் கொண்டு சபையில் ஆராதித்து வருகிறார்கள். சுதேச ஊழியர் சகோ. தாவ்ரா மெய்டா அவர்கள் காணிக்கையாகக் கொடுத்த நிலத்தில், தேவ நாம மகிமைக்காக புதிய ஆலயம் ஒன்று கட்டப்பட்டு, 25.01.2015 அன்று பேராயர். வே. தேவதாஸ் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த ஆலயம் **இயேசு விடுவிக்கிறார்,** நாலுமாவடி ஊழியத்தின் மூலம் கொடுக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் கட்டப்பட்டது.

**ரூ. 3 இலட்சங்கள் (or) ரூ. 2 இலட்சங்கள் மதிப்புகளில்
இந்த 2015 ஆம் ஆண்டிற்குள் 100 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க
முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD - PROJECT



மாணவனின் பெயர் : **ரூபன் K. ராட்டுவா**

தந்தையின் பெயர் : காகடா ராட்டுவா

தாயாரின் பெயர் : சாந்தி ராட்டுவா

பிறந்த நாள் : 11.07.2004

படிக்கும் வகுப்பு : 5th Std.

சொந்த ஊர் : சிக்லி

மாவட்டம் & மாநிலம் : வடோதரா, குஜராத்

**மாணவனின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–** இவனுடைய தந்தை இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தை சேர்ந்தவர். இவர் அந்தகார வாழ்க்கையில் வாழ்ந்து வந்தார். திடீரென 2003–ல் வியாதிப்பட்டார். அவருடைய சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் செய்தும், மருத்துவ சிகிச்சை செய்தும் எந்த பலனுமில்லை. பின்பு ஷாலோம் ஊழியர் மூலம் இயேசுவை அறிந்து, ஊழியர் இவருக்காக ஜெபித்தபோது தேவன் விடுதலைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். பின்பு ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து, 1வருடம் வேதாகம பயிற்சி எடுத்து ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வந்தார். தற்போது போதகராக அபிஷேகம் பண்ணப்பட்டு தன் சொந்த கிராமமான சிக்லியில் இப்போது ஊழியம் செய்து வருகிறார். இவர் மூலம் அநேகர் இயேசுவை ஏற்றுக் கொண்டனர்.

**மாணவனைக் குறித்து :–** ரூபன் நன்றாக படிப்பான். நன்றாக ஜெபிப்பான். இவனுக்கு 1 சகோதரன் உண்டு.

**ஜெபியுங்கள் :–** இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

மாணவனைத் தாங்குபவர் :– **Mr. J. Johnson,** Tuticorin.

### ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 700/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 1189 மாணவர்களில் இன்னும் 229 **மாணவ மாணவியர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.